★★★

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 | இதழ்
19—11—1978 — 10

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி 14

(பாலம்மாள் வீட்டிலிருந்துஓடிவந்த அண்ணாச்சியுப் நொண்டியும் வீதியில் பதை பதைப்புடன் பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடுங்கிய நிலையில் ஒருவரையொருவர் பிடித்துக் கொள்கிறார்கள்)

அண்ணாச்சி: ஏ. நொண்டி என்னடா இது?... பைத்தியமா ? பேயா?பிசாசா? அந்தக் கூச்சல் போட்டாளே— ஏப்பா! அசல் காளிகா தேவியேதான்.

நொண்டி: அண்ணாச்சி பாக்கிறேன் ஒரு கை! அந்த பாலம்மா கிழவி பணத்தையும் வாங்கிக்கிட்டு நம்பளையும்ஏமாத்தியிருக்கிறு!

அண்ணாச்சி: நீதானே சொன்னே; முன்னயே உனக்குத் தெரிஞ்ச இடம்னு!

நொண்டி: ஆமா! அதில என்ன சந்தேகம்? இப்ப என்னமோ திடீர்னு இப்படி ஆகியிருக்கு!

அண்ணாச்சி: போடா! ஆசையும் நிராசையாப்போச்சு; ஆயிர ரூபா பணமும் போச்சு! ஏண்டா ... அந்தக் காளிதேவி மாதிரி ஆடினவ சின்ன குட்டி மாதிரிதானே இருந்தா!

நொண்டி: அந்தக் களேபாரத்திலே அந்தப் பிசாசோட வயசைக்கூட நீங்க கவனிச்சிருக்கீங்க! நான் தப்பிச்சோம் பிழைச்சோம்னு ஓடியாந்திட்டேன்...

அண்ணாச்சி: நம்ப வாழ்க்கையிலே இன்னைக்கு ஏற்பட்டது பெரிய அவமானம்டா!...

நொண்டி: அதுவும் நம்ப ராஜ்யம் புனித ராஜ்யம் நடக்கிற காலத்திலே ஒரு பொம்பளை இப்படி நம்பளை அவமானப் படுத்துறதா?

சே சே! என் தோள் துடிக்குது; என் நெஞ்சு வெடிக்குது; பல்லு நாக்கைக் கடிக்குது; அவ்வளவு ஆத்திரம் எனக்கு! என காலமாத்திரம் சரியாக இருந்தா இந் நேரம் ருத்ர தாண்டவமே ஆடியிருப்பேன்!

அண்ணாச்சி; ஏய்! இப்ப நம்ப ரெண்டுபேரும் ஆடிகிட்டுத்தான் இருக்கோம். ரோட்டிலே ரொம்ப நேரம் ஆடினு யாராவது போலீஸ்காரன் கண்ணிலே பட்டுடுவோம். வா, வா – ஒட்டல்ல போயி தூங்கியாவது தொலையலாம்

(அப்போது "யாரப்பா அது? என்று அதிகாரக் குரலில் கேட்டபடி இரண்டு போலீஸ்காரர்கள் அங்கு வருகிறார்கள்]

நொண்டி: (சலாம் செய்து) வணக்கம் சார்!

போலீஸ்காரர்: என்னதெருவிலே உளறிகிட்டு நிக்கிறீங்க?...

நொண்டி: உளறலா? சே! சே! இன்னைக்கு சாயங்காலம் நடந்த அரசாங்க விழாவிலே நம்ப அமைச்சர்கள் பேசினதைப்பத்தி பாராட்டிப் பேசிகிட்டு இருக்கிறேம்!

போலீஸ்: என்ன பேசினுங்க? என்ன விழா? எதைப்பத்தி சொல்றீங்க?

நொண்டி: அதாங்க! காந்தி பிறந்த நாள் விழா — அதில பேசலே நம்ப அமைச்சருங்க?

போலீஸ்; அதான் என்ன பேசினுங்க? நீங்க அந்தப் பேச்சிலே எதைப் பாராட்டுறீங்கன்னு கேக்கிறேம்?



அண்ணாச்சி: அதான் சார் கருணாநிதியைப் பத்தி எங்க அமைச்சரு வெளுத்துக் கட்டினுரே; அதைச் சொல்றுன்!

போலீஸ்: காந்திபொறந்த நாள் அப்படிங்கிறீங்க! கருணாநிதியைப்பத்தி பேசினதா சொல்றீங்க? உளறுதீங்க! காந்தி பிறந்த நாளா?கருணாநிதிபிறந்த நாளா? எதைப்பத்தி சொல்றீங்க?...

அண்ணாச்சி: அந்த மண்டபத்திலே காந்தி கட் அவுட்தான் வச்சிருந்துது அதுக்குத்தான் மாலை போட்டிருந்துது!

காந்திநாமம் வாழ்கன்னு பெரிய தட்டிகூட கட்டியிருந்தது சார்!

போலீஸ்: அப்ப காந்தி ஜெயந்திதான் — காந்தியைப் பத்தி தான் பேசியிருப்பாங்க!... கருணாநிதி பத்தி ஏன் பேசப் போறாங்க?

நொண்டி; அது என்னமோ கருணாநிதி, அன்பழகன், கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு முஸ்லீம்லீக்கு, பார்வர்டு பிளாக்கு, காந்தி காமராஜ் காங்கிரசு, குடியரசுக்கட்சி, திராவிடக் கழகம் அப்படி இப்படின்னு ரெண்டு மூணு மந்திரிகள் விடு விடுன்னு விட்டாங்க!

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

முதற் கட்ட

மொழிப் போர் வரலாறு!

வருகிற டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெறுவதையொட்டி, மொழிப் போரின் முந்திய வரலாற்றினை இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

1938 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் கட்ட இந்தி எதிர்ப்பு அறப்போரின் நிகழ்ச்சிகள் சுருக்கமாக இக் கட்டுரையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரம் கேரளம், கருநாடகம் உள்ளிட்ட அன்றைய சென்னை மாநிலத்தில் பதினைாண்டுக் கால நீதிக்கட்சி ஆட்சிக்குப் பின் முதன் முதலாக காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தது 1937 ஆம் ஆண்டுதான். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் தலைமையிலான காங்கிரசு அமைச்சரவை 14.7.1937.ல் பதவியேற்றது.

முதலமைச்சர் ஆச்சாரியார் பதவிக்கு வந்தவுடனேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டில் திணிக்க முனைந்தார். அதுதான் கட்டாய இந்தித் திட்டம்.

காந்தியாரின் சம்பந்தியான ஆச்சாரியார் காந்தியாரின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதன் மூலம், காந்தியாரிடம் மட்டுமின்றி அனைத்திந்தியாவிலும் தமக்குத் தனிப்புகழ் கிட்டும் என்று நினைத்தார் போலும்! எனவேதான் வட மாநிலங்கள் கூடச் செய்யத் துணியாத அந்தக் காரியத்தை முந்திக் கொண்டு தமிழ் நாட்டில் செய்யத் துணிந்தார்.

பள்ளிகளில் 5, 6, 7 ஆம் வகுப்புகளில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தினர். இந்தியில் தேறாதவர்கள் மேல் வகுப்புக்களுக்குச் செல்ல இயலாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது,

ஆச்சாரியார் அன்றுசெய்த இந்தத் தவறுதான் பிற்காலத்தில் அவராலேயே தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு இந்தி ஆதிக்கம் தலைதூக்க வழிசெய்து விட்டது.

மாநிலங்களில் இந்தியைக் கட்டாயமாக்கவேண்டும் என்று அனைத்திந்தியக்காங்கிரசுக்கட்சி கட்டளையிடுவதற்கு முன்னரே ஆச்சாரியார் தமது மாநிலத்தில் அதனைச் செய்து அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாகலாம் என்றுநினைத்தார். அதன் விளைவுதான் இன்னமும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழர்கள் கொதிப்பு!

கட்டாய இந்தி ஆணை பிறந்தது கண்டு தமிழ் உள்ளங்களெல்லாம் கொதித்தெழுந்தன. உயிரினும் இனிய தமிழ் மொழிக்கு வந்துற்ற தீங்கினைத் தடுத்து நிறுத்த தமிழர் பெரும்படை திரண்டது. தமிழை இகழ்ந்தவரை தாய் தடுத்தாலும் விடோம் என வெகுண்டெழுந்தனர் தமிழ்ப் பெருங்குடி மக்கள்.

"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! என்று முழங்கி, படைத்திரட்டினர். செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் இந்தத் தேகமிருந்தொரு லாபமுண்டோ? எனச் சூளுரைத்தனர்; எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும் எனவினை எழுப்பினர்.

கட்டாய இந்தியை எதிர்ப்பதில் கட்சி, கொள்கை, சமய வேற்றுமைகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, தன்மானமுள்ள தமிழர்களெல்லாம் ஓரணியில் திரண்டனர்.

நாத்திகரான தந்தை பெரியார் மட்டுமல்லாது ஆத்திகரான மறைமலையடிகளும், தேசியவாதிகளான நாவலர் சோமசுந்தர பாரதியாரும் திரு. வி கல்யாணசுந்தரனாரும் இந்தியை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றனர்.

தன்மான இயக்கத் தலைவர் தந்தை பெரியார் தலைமையில் இருந்த நீதிக்கட்சியினர் தான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நடத்தினர் என்றாலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த தமிழறிஞர்களும் துறவிகளும் அதில் பங்கு கொண்டனர்.

ஆச்சாரியாருக்கு பகிரங்கக் கடிதம்

அன்றுவரை காங்கிரசுக்காரராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலமைச்சர் ஆச்சாரியாருக்கு இந்தியை எதிர்த்து ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினர். அதில் அவர் இந்தித் திணிப்பால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் எனனென்ன தீமைகள் நேரிடும் என்பதையெல்லாம் எடுத்துரைத்து இந்தித் திணிப்பைத் திரும்பப் பெறுமாறு வற்புறுத்தியிருந்தார். தாமே ஒரு தேசியவாதியாக இருந்தும் இந்தியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றும். இந்தியை எதிர்ப்பது தேசிய விரோத காரியமல்ல என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

பாரதியாரின் பகிரங்கக் கடிதத்தையும் ஆச்சாரியார் பொருட்படுத்தவில்லை. தமிழறிஞர்கள் பலரின் எச்சரிக்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

1937ஆம் ஆண்டு அக்டோபர் நான்காம் நாள் சென்னை கோகலே மண்டபத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூடியது. தமிழ்க் கடல் மறைமலையடிகளார் தலைமை தாங்கினர். நாவலர் சோமசுந்தர பாரதியார் முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா (முதலியார்) அறிஞர் அண்ணா, அலமேலு மங்கைத் தாயாரம்மாள் சற்குணம் பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலியோர் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்து முழங்கினர்.

இம் மாநாட்டின் எதிரொலியாகத் தமிழகமெங்கும் இந்தி எதிர்ப்பு உணர்வு அலைமோதியது.

அடுத்து 26 12 37 அன்று திருச்சியில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நாவலர் சோம சுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. கடல் கடந்த நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்கள் வந்து இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பெரியாரின் புரட்சித் தீர்மானம்

இந்தியைக் கட்டாயமாக்கும் முயற்சியைக் கண்டித்தும், இந்த அநீதியைத் தமது தனி உரிமையைக் கொண்டு தடுத்துத் தமிழர்களுடைய மொழி. கலை, ஆகியவற்றைக் காப்பாற்ற முடியாததால் சென்னை கவர்னர் மீது தமிழக மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என்றும் புரட்சிகரமான தீர்மானமொன்றை, தந்தை பெரியார் அவர்கள் இம் மாநாட்டில் கொண்டு வந்து நிறைவேறச் செய்தார்கள்.

திருச்சி மாநாட்டை அடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியைதிரும்பிப்பார் என்னும் தலைப்பில் 'விடுதலை' ஏட்டில் எழுதிய தலையங்கம் கண்டு ஆட்சியாளருக்கு நடுக்கம் ஏற்பட்டது.

1938 – பிப்ரவரி 27-ப் நாள் காஞ்சிபுரத்தில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது ஆந்திரத்தைச் சேர்ந்தவரும், பிறகு ஆந்திரப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தவரும், சிறந்த அறிஞருமான சர். கே. வி. ரெட்டி தலைமை தாங்கினர். கேரளத்து அரசியல் மேதையான திரு. கிருஷ்ணன் நாயர் மாநாட்டைத் துவக்கிவைத்தார். மற்றும் வேலூர், காரைக்குடி, சேலம், கோவை முதலிய நகரங்களிலும் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் நடைபெற்றன.

இம் மாநாடுகளில் தமிழ்க் கடல்மறைமடிகளார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்ற பெரும் புலவர்களும், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், சி. டி. நாயகம், கி. ஆ. பெ விசுவநாதம், கே. வி. அழகிரிசாமி, சர். கே. வி. ரெட்டி, சி. பாசுதேவ், சண்டே அப்சர்வர் பி. பாலசுப்பிரமணியம் போன்ற மறைந்த மாவீரர்களும், பெரியார், அண்ணா புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலிய இயக்கத் தலைவர்களும் பங்கு கொண்டனர்.

புதுக்கோட்டை திவானாக இருந்த கலிபுல்லா சாகிப் அவர்கள் இந்தியை எதிர்த்து ஆற்றிய சொற்பொழிவுகளும் விடுத்த கண்டனங்களும் அன்றைய ஆச்சாரியார் ஆட்சியைத் திணற வைத்தன.

அழகிரி நடத்தி வந்த தமிழர் பெருப்படை!

நீதிக் கட்சித்தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற ஐ. குமாரசாமி [பிள்ளை]

தலைமையில், அஞ்சாநெஞ்சன் பட்டுக் கோட்டை அழகிரிசாமி அவர்கள் திருச்சியிலிருந்து 'தமிழர் பெரும்படையொன்றினை சென்னைக்குக் கால் நடையாக நடத்தி வந்தார். இப்படையில் காலஞ்சென்ற மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையார் அவர்களும் இடையில் பங்கு கொண்டார்கள்.

இப்படை 1938 - ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் திருச்சியிலிருந்து புறப்பட்டு செப்டம்பர் பதினோராம் நாள் சென்னை மாநகரை அடைந்தது. வழியில் உள்ள ஊர்களிலெல்லாம் இந்தியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். அந்தந்த ஊரிலும் தன்மானத் தமிழர்கள் இந்தப் படையை வரவேற்று வழியனுப்பி வைத்துத் தங்கள் பேராதரவை வெளிப்படுத்திக்கொண்டனர்,

இந்தத் தமிழர் பெரும் படைக்கு சென்னை நகரில் மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது அன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் இலட்சோப லட்சம் தமிழர்கள் திரண்டிருந்தனர்.

தமிழ்க் கடல் மறைமலையடிகளார், தந்தை பெரியார் அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர்கி.ஆ பெ.விசுவநாதம் முதலான தலைவர்களும் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் போன்ற வீராங்கனைகளும் இந்தியை எதிர்த்துப் போர்ப்பறை முழங்கினர்.

கோடம்பாக்கம் மாநாடு!

சென்னை கோடம்பாக்கத்தில் 3—6—1938 அன்று மறைமலையடிகளார் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அப்போது முதலமைச்சர் ஆச்சாரியார் வீட்டு முன் இரண்டு நாட்களாக இந்தியை எதிர்த்து உண்ணாவிரதமிருந்த பல்லடம் பொன்னுசாமி கைது செய்யப்பட்டார் என்ற செய்தி கேட்டு மாநாட்டில் கூடியிருந்த மக்கள் கொதித்தெழுந்தனர். அவர்கள் அன்று தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க ஊர்வலமாகச் சென்ற

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இந்தித்திணிப்பு குறித்து சுனித்குமார் சட்டர்ஜி

அகில இந்திய காரியங்களுக்காக ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி இருக்கலாம் என்று மேற்கொண்ட முடிவு மிக அவசரப்பட்ட முடிவாகும்.

மேலும் இந்தி மொழியின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்குமாக இந்தியா முழுவதிலுமிருந்து பொதுப்பணம் செலவிடப்படுகிறது. இந்தச் செயல் இந்தி வழங்காத பகுதி மக்களுக்கு ஆத்திரமூட்டும் என்பதில் தவறில்லை.

சுதந்திர இந்திய மக்களின் நலனுக்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதானது எந்த வகையிலும் விரோதமானதல்ல; பெரியதும் சிறியதுமான இந்திய மொழிகளுடன் தொடர்ந்து ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று விருப்புகிறேன்.

ஆட்சி மொழிக்குழு (இந்தித் திணிப்புக் குழு) உறுப்பினரான டாக்டர் சுனித் குமார் சட்டர்ஜி அக்குழுவின் அறிக்கையிலேயே தெரிவித்துள்ள கருத்து. (1960)

தடம் புரண்ட போக்கிற்கு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராவுக்கு நீண்ட நாள் விருப்பம் வெளிநாட்டுப் பயணம் செல்வதற்கு நீதிமன்றத்தின் நெடியபடிக்கட்டுகளில் ஏறி இறங்கிய பின்னர் இங்கிலாந்து செல்வதற்கு அனுமதியைப் பெற்றார்.

இந்திய அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் திரா வாழ்க'' ஐம்பது அறுபது குரல்களே சேர்ந்து மெலிந்து ஒலித்தன.

''திரும்பிப்போ'' ''ஒழிக'' என்ற கோஷங்கள் உள்ளம் வெதுமபி வெடித்துக் கிளம்பின.

இந்திராவை வரவேற்று வாழ்த்துக் கூற வந்த கூட்டத்தைவிட எதிர்ப்புக் குரல்

காரி விஷயமாக ஆர்வமற்ற விநயத்தைக் காட்டுவது தான் பிரிட்டிஷ் பொதுவாழ்வுத் துறையினர் பின்பற்றக் கூடிய மிகச் சிறந்த போக்காக இருக்கும்...இந்திராகாந்தியை வரவேற்க தலைமை அமைச்சரும் அவரது சகாக்களும் தயாராக இருக்கிறார்கள் என்றால் இதே போக்கை அமெரிக்க பேசவந்த இந்திரா அதை நியாயப் படுத்தத் தயங்கவில்லை.

தன்னையும் தன் குடும்பத்தாரையும் கொல்லசிலர்முயன்றார்கள் என்று பச்சைப்பொய்யைப் பகிரங்கமாக பரிமாறினார்,

அதுமட்டுமன்று—

தப்புத் தாளம் போடுகிறார்!

முயற்சியே இந்திராவின் இங்கிலாந்துப் பயணம்! ஆம்! அகில உலகஅரசியல் அரங்கில் புதிய அந்தஸ்தைப் பெற இந்திரா செய்த ஓர் ஏற்பாடு இது! நடந்து முடிந்த நாடாளுமன்ற சிக்மகளூர் இடைத் தேர்தலில் போட்டியிட்டு எதிர் பார்த்த வெற்றியும் பெற்று நாடாளு மன்ற உறுப்பினர் என்ற தகுதியோடு மேலை நாட்டுப்பயணம், மேற்கொண்டார், இது ஒரு ராஜதந்திரமே!

இத்திங்கள் நவம்பர் பன்னிரண்டாம் நாள் இலண்டன் நகரத்திலுள்ள 'ஈத்ரு' விமான நிலையத்தில் இந்திராகாந்தி வந்து இறங்குகிறார்,

தனிமையாக அல்ல; இந்திய நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க் கட்சித் தலைவரான சி எம் ஸடீபனும் மற்றுமொரு எம் பியும் புடைசூழ இருந்தனர்,

கடந்த பதினைந்து நாட்களாக இந்திரா சார்பு பத்திரிகைகளெல்லாம் இந்திரா காந்தியின் இலண்டன் பயணம் குறித்து செய்தி போட்டு விளம்பரப்படுத்தி வந்தன. இங்கிலாந்து நாட்டிலேயும் இருக்கின்ற பத்திரிகைகளில் சில இந்திராவின் வருகையைப்பற்றி வேண்டிய விளம்பரங்களைச் செய்யத் தவறவில்லை, ஆனால் பல பத்திரிகைகள் எதிர்த்தன

இந்த நிலையில்...இந்திரா காந்தி, விமானத்தில் இருந்து இறங்கி வெளியே வருகிறார், ''இந்திரா வாழ்க என்ற முழக்கத்தோடு சேர்ந்து ஒலிக்க வேண்டிய ஒருசொல் 'ஒழிக' சப்தத்தில் அமிழ்ந்து போகிறது,

'இந்திராவே திரும்பிப்போ'' ''இந்திராவே திரும்பிப்போ'' ''இந்திரா ஒழிக'' நூற்றுக்கணக்கான குரல்கள் இவ்வாறு சேர்ந்து ஒலிக்கின்றன.

''இந்திரா வாழ்க'' ''இந் எழுப்ப வந்த கூட்டமே அதிகமாயிருந்தது.

இலண்டனில் அயல்நாட்டுப் பெருமுதலாளிகளும் மாஜி மகாராஜாக்களும் மகாராணிகளும் தங்கும் ஆடம்பரஉணவு விடுதியான கிளாரிட்ஜ் ஓட்டடல் வாயிலிலிருந்து வெளியே வந்தபோது,

'பாசிச இந்திராவே திரும்பிப்போ! ஜனநாயக விரோதியே திருப்பிப்போ!'

என்ற ஒலி முழக்கங்கள் வானைப்பிளந்தன, இவ்வாறு முழக்கமிட்டவர்கள் இங்கிலாந்துக்காரர்கள் அல்ல இலண்டனில் வாழ்ந்துவரும் இந்தியர்களே!

அயல்நாட்டில்வாழ்ந்துவரும் இந்தியர்கள் அன்னை இந்திராவின் வருகைக்குத்தவம் கிடக்கிறார்கள் என்ற தப்பான எண்ணத்தை இந்தச் சம்பவம் தவிடுபொடியாக்கிவிட்டது

ஜவகர்லால் நேரு காத்துப் போற்றி வந்தஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து விட்டாரே இந்திரா என்பதற்குத் தான்வேதனை கலந்தகுரலோடு திரும்பிப்போ'' என்றமுழக்கம் திக்கெட்டும் ஒலித்தது

இலண்டன்காவல்துறைக்கு இந்திராவின் வருகைஇன்னலை ஏற்படுத்திவிட்டது. உடுப்பு அணிந்த போலீசாரும் உடுப்பு அணியாத போலீசாரும் விமான நிலையத்தின் உள்ளும் புறமும் குழுமியிருந்தனர் இவர்கள் இந்தியர்கள் மீதும் இந்தியர்போல் காணப்பட்டவர் மீதும் கண் வைத்தே இருந்தனர்; உலகப் புகழ்பெற்றஸ்காட்லந்துயார்டு இரகசியப்போலீசாரும்நிழலாகத் தொடர்ந்தனர்

ஜனநாயத்தின்மீது அழுத்தமான நம்பிக்கை கொண்ட பத்திரிகைகள் அந்த அம்மையாரின் வரவேற்புக்கு எதிர்பைத் தெரிவித்தன, அவை இங்கிலாந்து அரசாங்கம் இந்திராவை வரவேற்கக் கூடாது என்று கண்டிப்பான வார்த்தைகளில் தங்கள் கருத்துக்களை வெளியிட்டன.

''இந்திராகலந்து கொள்கிற இந்தியா பிரிட்டிஷ் சங்கவிருந்தில் ஒரு அமைச்சரோ அல்லது எதிர்க்கட்சித் தலைவரோ கலந்து கொண்டால் அது பிரிட்டிஷ் நாட்டுக்கே இழுக்கு!

இந்திராகாந்தி முழுக்க முழுக்க ஊழல் மிக்க ஒரு அரசியல்வாதி. அவர் ஒரு இடைத் தேர்தலில் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து வருகை தருவதன் மூலம் அகில உலக அளவில் மதிப்புப் பெற முடி

சா. கணேசன்

யும் என்றுஇந்திரா இப்போது நம்புகிறார்... இது (பிரிட்டன்) ஒரு சுதந்திர நாடு எனவே இங்கு வர விரும்பும் எவரும் அவ்வாறு செய்ய உரிமை இருக்க வேண்டுல்.

ஆனால் இந்திரா காந்தியை வரவேற்க வேண்டும் சிறப்பிக்க வேண்டும். அல்லதுஇந்த நாட்டு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதாகக்கூறிக் கொள்ளும் அரசியல்வாதிகள் இந்திராகாந்தியை ஏதாவது ஒரு வகையில் அங்கீகரிக்க வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல...''

உலகின் கவனத்தைக் கவர்ந்த டைம்ஸ் பத்திரிகை இவ்வாறு தலையங்கமே தீட்டியிருக்கிறது.

தரமிக்க இன்னொரு பத்திரிகை; பத்திரிகா தர்மத்தைக் காற்றிலே பறக்கவிடும் சில தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் போன்றது அல்ல அது. பெயர் சண்டே டெலிகிராப்''

''முன்னாள் இந்தியசர்வாதி முன்னாள் குடியரசுத் தலைவர் நிக்சனுக்கும் பின்பற்ற அவர்களால் மறுக்க முடியாது.

நிக்சனும் பிரிட்டனுக்கு வரத் திட்டமிட்டிருக்கிறார். நிக்சனின் பாவங்கள் இந்திரா காந்தியின் பாவங்களைவிடக் கொடுமையில் குறைந்தவையே ஆகும்.'' இப்படிக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது சண்டே டெலிகிராப்,

இந்திராவைச் சாடியது போல் எந்த ஒரு இந்திய அரசியல் வாதியையும் இலண்டன் பத்திரிகைகள் இவ்வளவு கடுமையாக இதுவரை தாக்கியதில்லை.

இலண்டனில் வாழும் இந்திய மக்களின் வெறுப்பும், வேதனையும் வெளிப்படும் நிலையில் அயல் நாட்டவரின் அளவிட முடியாத வேதனை கலந்த வெறுப்புக்கிடையில் இந்திராவின் இலண்டன் பயணம் எதைச் சாதிக்கப் போகிறதோ!

இந்திரா காந்தி தாம் பயணம் மேற்கொள்ளுமுன் வெளிநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்ற நீதிமன்றத்தின் நிபந்தனையை எழுதிக் கொடுத்து ஏற்றுக் கொண்ட பின்னர்தான் இலண்டன் சென்றார்.

வழக்குமன்றத்தின் ஆணையை வாடிக்கையாகவே மீறிவரும் இந்திரா காந்தி இந்த முறையும் நீதிமன்றத்தை மீறியதில் வியப்பு ஏதுமில்லை.

இலண்டன் மாநகரில் இந்திய அரசியல் குறித்து இந்திரா காந்தி விரிவாகவே பேசியுள்ளார்.

சட்ட மீறல்கள்—
நிபந்தனையை உடைத்தல்—
பொய் கூறல்—

ஆகிய அனைத்தும் மாண்புமிகு மாஜி பிரதமரின் தனித்தன்மைகள் அல்லவா?

நெருக்கடி நிலையைப்பற்றிப் பேசவந்த... மீண்டும் தலைமைஅமைச்சராகும் ஆசை தனக்குக் கிடையவே கிடையாது என்றுகூறிய இந்திரா, மக்களுக்குச் சேவை செய்வதே தன் நோக்கம் என்கிறார்.

தன் மகன் சஞ்சய் காந்தியைப்பற்றிய பிரச்சினைஎழுந்தபோது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினார்: தன் மகன் '' ஏதும் அறியா பேதை என்று கூறியவர் சில அரசியல் வாதிகள் ஆதாயத்திற்காக சுயநலத்திற்காக அவரைப் பயன் படுத்திக் கொண்டனர் என்று சப்பைக் கட்டுக் கட்டினார்; சாகசம் பேசினார்.

ஜனதா ஆட்சியின் கீழ் இந்திய மக்கள் அச்சத்தோடு வாழ்கிறார்கள் என்று ஒரு பச்சைப் பொய்யை பகிரங்கமாக எடுத்துக் கூறினார்.

தன் பழைய நண்பர்களைப் பார்ப்பதற்காகவேதாம் இலண்டன் வந்துள்ளதாக இறுதியில் பறைசாற்றினார்.

பழைய பொய்கள் — இட்டுக்கட்டிய இழிகதைகள்— எல்லாவற்றையும் இணைத்து இங்கிலாந்தின் அரசியல் சந்தையில் விற்கப் பார்த்திருக்கிறார்— இந்திரா காந்தி. அதன் மூலமாக இழந்த பீடத்தை மீட்கப் பார்க்கிறார், இதற்காக அவர் மேற்கொள்ளும் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராகப் போகும் ஆனால் அவருடைய அரசியல் விளையாட்டு நடவடிக்கை கானல் நீராகக் காட்சித் தருகிறதே!

சவுத்ஹால் என்ற இடத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத்திற்கு இந்திரா வருகை தந்தபோதுசிரோமணி அகாலி தளம், இங்கிலாந்து கம்யூனிஸ்ட்கட்சி, பிரிட்டன் • இந்

(தொடர்ச்சி 10ம்–பக்கம்)

புதுவை அரசியல்
போதிக்கும் பாடம்!

கோட்டைக்கு உள்ளேயே குத்து—வெட்டு நடந்து விட்டது'

ஆட்டம் போட்டு வந்த அதிகார வெறியர்கள் ஓட்டம் பிடித்தனர், உட்பகை காரணமாய்!

நாட்டுக்கே களங்கமாய் நாற்றமெடுத்த அரசொன்றை நடாத்தி வந்தார் இராமசாமி என்பார்!

குப்பையினும் கேவலமாகி விட்ட அன்னாரது ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டது மைய அரசு!

சொந்தக் கட்சிக்காரர்களே அ. தி. மு. க. ஆட்சிக்குத் தோண்டி விட்டனர் சவக்குழியை!

சிந்தனைத் தெளிவு இனியேனும் புதுவை அரசியலில் தேரோட்டம் நடத்தினால் நலமாக இருக்கும்;

1977—ஜூலை — இரண்டாம் நாள் புதுவை மாநில முதல்வராக இராமசாமி பொறுப்பேற்றார். பதினாறு மாத கால ஆட்சியில் அவருக்குப் பதைபதைப்பு மன உதைப்பு—இல்லாத நாளே இல்லை; ஏன் நொடியே இல்லை!

அந்த அளவுக்கு அவரது கட்சியைச்சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தந்து வந்திருக்கின்றனர் தாங்காத தலைவலியை!

மூக்கைத் துளைக்கும் சாக்கடை அரசியல்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஓர் அருமையான அரசியல் மறையை—ஒழுக்க விதியை—இந்த உலகுக்கு வழங்கினார்.

அதுதான் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பதாகும்

மதர்ப்பேறிய மாட்டுக்கு மூக்கணாங் கயிறு போல—

மமதை ஏறக்கூடிய மனிதனை நெறிப்படுத்தவும் இந்த மூன்று சிறப்பியல்களும் மிகவும் தேவை

அதுவும் அரசியல் வாதிகளுக்கு இவை கண்டிப்பாகத் தேவை.

ஆனால், அண்ணாவின் பெயரையே தன்னகத்தேகொண்ட ஒரு கட்சியைச் சார்ந்தவர்களே. தங்கள் கடமையை மறந்தனர். கண்ணியத்தைத் துறந்தனர், கட்டுப்பாட்டை இழந்தனர்.

அதன் விளைவே புதுவையிலே இன்று ஆட்சிக் கலைப்பு!

அண்ணாவின் தம்பி என்று சொல்லிக் கொள்கின்றவர் பேணிக் காக்க வேண்டிய முதல் இலக்கணம் என்ன?

எந்த வாய்ப்புக்கும் வசதிக்கும் இச்சைப்பட்டு அலையாத பதவிக்கும் பகட்டு வாழ்வுக்கும் பேராசை பிடித்துத்திரியாத - பண வெறி என்பதற்கே இடம் கொடாத— 'தன்னல மறுப்பாளர்'-ஆகத் தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால் புதுவை ஆளுங்கட்சியைச் சார்ந்திருந்த 'அண்ணாவின் தம்பிகள் (!)' அப்படியா நடந்து கொண்டனர்?

மதுப் புட்டிகளால் வரக்கூடிய போதையை விட பதவிப் பேராசை வழங்கிய போதையே அவர்களுக்குப் பெரிதாகப்பட்டிருக்கிறது.

இல்லை யென்றால் கட்சிக் கட்டுப்பாட்டுக்குச் சவப் பெட்டியைச் செதுக்கிவைத்து விட்டு ஒருவர் காலை இன்னொருவர் தட்டிவிட்டு மிதிக்கின்ற 'ஊஞ்சல் அரசியல்' நடத்தி இருப்பார்களா?

இதுதான் அண்ணாவின் தம்பிகளுக்கு அழகா?

இவர்கள்தான் அண்ணாவின் உண்மைத் தம்பிகளா?

அண்மைக் காலமாகப் பாண்டிச்சேரியில் பெருக்கெடுத்துப் பாய்ந்த 'சாக்கடை அரசியலை' நினைத்தாலே மூக்கைப் பிடித்துக் கொண்டு மூச்சுத் திணற வேண்டியதுதான்!

முதல் கோணல்—முற்றுங் கோணல்!

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்ற பிறகு புதுவை மாநிலத்தில் ஒரு தடவை இல்லை இரண்டு தடவைகள் இல்லை; ஐந்தாவது தடவையாக அங்குக் குடியரசுத் தலைவரின் (ஜனாதிபதியின்] ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

இதிலிருந்தே அங்குள்ள அரசியல்வாதிகள் நிலையற்ற அரசியல் கோட்பாடுகளுக்கு நிலைக் களன்களாகத் திகழ்கிறார்கள் என்பது விளங்கவில்லையா?

கடைசியாகப் பதினாறு மாதங்களுக்கு முன்பு 1977 ஜூன் திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளில் 15 தொகுதிகளை அ. தி. மு, க. கைப்பற்றியது. தானே தனித்து

மறைமலையான்

ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மை வலிமை அதற்கு இல்லை, எனவே, ஒரே ஓர் இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினரின் 'தயவை' நாடி அது ஆட்சிக் கொலுவில் அமர்ந்தது

ஆனால், அமைச்சரவை அமைக்கும் பொழுதே மண்டை ஓடுகளே விண்டு வெடிக்கும் அளவுக்குக் கொடுமையான 'தலைவலி' வடிவெடுத்துவிட்டது,

முதலமைச்சர் பதவியைப் பிடித்துக் கொள்வதில் இராமசாமியும் டி, இராமச்சந்திரனும் கடுமையாகப் போட்டியிட்டனர். இறுதியில் ஓர் உடன்பாடு காணப்பட்டு, இராமசாமி முதல்வராகவும் இராமச்சந்திரன் உள்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றனர்.

மைய அரசின் நேரடிக் கண்காணிப்புள்ள மாநிலங்களுள் ஒன்றான புதுவையில் ஐந்து அமைச்சர்கள்வரை அமர்த்திக் கொள்வதற்குச் சட்ட விதிகள் இடம் தந்துள்ளன.

என்றாலும் இந்தியாவிலேயே வேறெங்கும் நடக்காத வேடிக்கையாக இரண்டே அமைச்சர்களைக் கொண்ட ஓர் அரசு — ஒரு மாதம் இல்லை— இரு மாதம் இல்லை— ஓர் ஆண்டுக்கு மேலேயே ஆட்சித் தேரை ஓட்டி வந்தது புதுவை மாநிலத்தில்!

இராமசாமி செய்த முதல் தவறே அதுதான்.

தொடக்கத்திலேயே இன்னும் மூன்று பேர்களை அமைச்சரவையில் இணைத்துக்கொண்டிருந்தால் ஓரளவேனும் மன உளைச்சலைக் குறைத்துக் கொண்டு முதல் உர் தபவிக்குரிய கடமைகளை முறையாகவும் நிறைவேற்றியிருக்கலாம்.

ஆனால் 'முதல் கோணல்— முற்றுங்கோணல்' என்பதைப் போல தொடக்கத்திலேயே அவர் கோணலாக அரசியல் கோலத்தை இழுக்க முற்பட்டார்,

ஏன், இப்படியும் சொல்லலாம். அவரது கட்சியினரே முதல்வருக்குரிய மதிப்பைக் கொடுத்து அவரை முறையாகக் கோலம் போடவிடவில்லை. பதவிப் பித்து அவர்களிடம் படம் எடுத்து ஆடியிருக்கிறது.

எனவேதான் தம்மையும் இராமச்சந்திரனையும் தவிர வேறு எவரையுமே அமைச்சரவையில் இணைத்துக்கொள்ள இயலாத இக்கட்டுக்கு—இடர்பாட்டுக்கு—அவர் இலக்கானார். அவரது கட்சியைச் சார்ந்த மற்ற பதின்மூன்று சட்டமன்ற உறுப்பினர்களையுமே அமைச்சர்கள் ஆக்குவதற்கு அவரால் எப்படித்தான் முடியும்?

அதனால்தான் 'இரண்டுக்கு மேல் எப்போதும்வேண்டாம்' என்கிற குடும்பக் கட்டுப்பாட்டை அமைச்சரவை அமைப்பிலேயே கொண்டு வந்துவிட்டார் இராமசாமி!

சாக்குப் பந்தயம்?

இந்த நிலையில் உள்துறை அமைச்சரான இராமச்சந்திரனாவது ஒத்துழைப்பு நல்கினாரா?

எலியும் தவளையும்; இணைந்து குடும்பம் நடத்தப் புகுந்த கதைதான் அவர்கள் ஆட்சி நடத்திய அழகு!

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு நடத்தப்படும். விளையாட்டுப் பந்தயங்களில் 'சாக்குப் பந்தயம்' என்பதும் ஒன்று.

அதாவது ஒரே கோணிச் சாக்கினுள் இரண்டு மாணவர்கள் ஆளுக்கொரு காலை நுழைத்துக் கொள்வார்கள். ஒருவரது வலக்காலும் இன்னொருவர்இடக்காலும் சேர்ந்து ஒரே நேரத்தில் கோணிச் சாக்கைத் தூக்கிக்கொண்டு ஓடவேண்டும். இருவரும் ஒரே சீராக அடியெடுத்து வைக்காவிட்டால் பந்தயத்தில்வெல்ல முடியாது. என்பது மட்டும் அல்ல; தடுமாறியும் தரையில் விழும்படி நேரும்— பிறகு வேடிக்கை பார்க்க வந்தவர்கள் எல்லோரும் விலாப் புடைக்கக்கைகொட்டித்தான் சிரிப்பார்கள்.

ஆகவே சாக்குப் பந்தயத்தில் இணையாகச் சேரும் சிறுவர்கள் மிகவும் எச்சரிக்கையாக அடிபெடுத்து வைப்பார்கள்.

புதுவை மாநில அரசையும் அப்படிச் சாக்குப் பந்தயமாகத்தான் நடத்த முற்பட்டார்கள் இராமசாமியும் இராமச்சந்திரனும்;

ஆனால் எச்சரிக்கையாக அடிகளை எடுத்து வைக்காததால் இருவருமே தடுமாறி விழுந்து விட்டார்கள்.

போதாக்குறைக்கு இராமச்சந்திரனுக்கு இராதாபாய் சிக்கல் வேறு!

அந்த அம்மையார் ஒரு பொறுப்பான அரசு அதிகாரி

(9-ம் பக்கம் பார்க்க)

ஊர்ப் பெயர்களில் சாதி இருக்கலாமா?

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற கொள்கையுடன்,பெரியாரின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் சிந்திக்க வேண்டிய ஒன்று உண்டு. தமிழகத்தின் பல ஊர்ப் பெயர்கள் சாதியின் பெயரிலேயே அமைந்திருப்பது அனுமதிக்கப் படலாமா?

தருமபுரி மாவட்டம் அரூர் தாலுகாவில் 'பறையப்பட்டி.' சக்கிலிப்பட்டி, இருளப்பட்டி, ஒட்டப்பட்டி போன்ற ஊர்கள் சாதியை வளர்க்கும் விளம்பரப் பலகைகளாக இருக்கின்றன. இன்னும் இந்த அவல நிலைமை வேண்டுமா? அரசு உடனே இந்தப் பெயரை மாற்ற முன்வர வேண்டும்.

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணா மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் —பெண் கேன்வாசர்கள் தேவை.

தொலைபேசி:கடை:33213 இல்லம்:31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு:விற்பனை நிலையம்
92.திருப்பரங்குன்றம்சாலை மதுரை 11
தனிச்சிறப்பு:சிலேபி,தேங்காய்மிட்டாய்,அதிரசம், இனிப்புசேவு,பக்கவடா,மிக்சர்,முறுக்கு,கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே.தேவசகாயம்
கிளைகள்: 261.மேலமாசி வீதி, 70.சுவாமிசன்னதி
12.அழகர்கோவில் சாலை,72 CL வன்ஹால்ரோடு,மதுரை.

கள்ளுண்ட மந்தியானர்

பிழைக்கும் பத்திரிகையாளர்!

இந்திராவின் சிக்மகளூர் வெற்றி, பிழைக்கும் பத்திரிகைடாளர் ஒருவரை 'கள்ளுண்ட மந்தி' யாக்கியுள்ளது.

இந்திராவின் இந்தவெற்றியானது, எதிர்க்கட்சியினர் பட்டியலில் ஒரு எண்ணிக்கையைக் கூட்டியிருக்கிறது; இந்தக் கூடுதலான ஒரு எண்ணிக்கை மகத்தான விளைவு எதையும்நாடாளுமன்றத்தில் சாதித்துவிடப் போவதில்லை. ஆனல் பிழைக்கும் பத்திரிகையாளரோ — இந்திரா என்னவோ மீண்டும் தலைமை அமைச்சர் ஆகிவிட்டார் என்பது போல் 'ஆனந்தத் தாண்டவ'மாடுகிருர்.

அதுமட்டுமல்ல —

இந்திராவின் வெற்றி அவருடைய வெற்றியேதானும்... இந்திராவுக்கு வாழ்த்துக் கூறுபவர்கள் எல்லாம் அவர் மூலமே கூறுகிருர்களாம்... இதன் மூலம்தான் இந்திராவின் 'கார்டியன் (பாதுக்காப்பாளர்) என்றுசொல்லவிரும்புகிருரா? அல்லது 'பேட்டா' [மகன்] என்றுசொல்ல விரும்புகிருரா என்று தெரியவில்லை. இந்திராவை 'மா... மா...' [அம்மா ... அம்மா...] என்று அழைப்பதால், அநேகமாக அவருடைய 'தத்துப் புத்திரனுகவே' தன்னைப் பாவித்திருக்கக் கூடு ்.

மேலும் —

அவருடைய கட்டுரைகளைப் படித்துவிட்டுத்தான் எல்லோரும் தேர்தல் களத்தில் 'பொத் பொத்...' என்று குதித்தார்களாம்.

அதாவது; இந்திராவின் வெற்றியில் தேவராஜ் அர்ஸின் பங்கு ஒன்றும்அவ்வளவு பெரிதல்ல என்று சொல்லாமல் சொல்லுகிருர்... அவர் மட்டும் 'மாய்ந்து மாய்ந்து' கட்டுரைகள் எழுதியிராவிட்டால் இந்திரா நிச்சயம் தோல்வி அடைந்து குப்புற விழுந்திருப்பார் ... நம்புங்கள்!

'குஷி தாங்காத அந்தப் பிழைக்கும் பத்திரிகை எழுத்தாளர் போதாக்குறைக்கு டாங்கேயையும் சேர்த்து இழுத்துக்கொண்டு 'குதி குதி' என்று குதிக்கிருர்.

ஜார்ஜ் பெர்னண்டஸ், ஈ. எம், எஸ். நம்பூதிரிபாடு இருவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல், அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

என்றுடாங்கே எழுதியதை எடுத்துப்போட்டுப் பேரானந்தத்தில் திளைக்கிருர் பிழைக்கும் பத்திரிகையாளர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான தோழர் டாங்கே, இந்திரா பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை இந்த நேரத்தில் பி. ப. எழுத்தாளருக்கு நினைவூட்டுவது நமது கடமையாகும்;

அப்துல் ஜாகிருல்லா

கேள்வி: நெருக்கடி நிலையின் உண்மையான வடிவம் வெளிப்பட்ட பிறகும், இந்திராவுக்கு அளித்த ஆதரவை நீங்கள் ஏன் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை?

டாங்கேயின் பதில்: அது ஒரு தவறுதான், பொய்த் தோற்றங்களால் நாங்கள் தொல்லையுற்ருேம்...

கே: மத்தியில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் அமைவதற்கான வாய்ப்பு ஏதாவது உண்டா?

பதில்: அதற்கான வாய்ப்புகள் ஒளிமயமாகி வருகின்றன. இந்திரா, ஜனதா ஆகியோரின்கொள்கை வீழ்ச்சியின் பின் அனைத்து ஜனநாயக இயக்கங்களும் ஒன்று பட்டால் மத்திய அரசாங்கத்தில் நாம் ஒரு அரசைத் தோற்றுவிக்க முடியும்.

'—இண்டியா டுடே'
15—10—78

இந்திரா ஒரு ஜனநாயகவாதி அல்லர்என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிருர் டாங்கே.

டாங்கேயின் இரங்கல் தீர்மானத்தை அங்கீகரிக்கும் பிழைக்கும் பத்திரிகையாளர் 'இந்திரா, ஒரு ஜனநாயகவாதி அல்லர்' என்றகருத்தை மட்டும் மறைக்கப் பார்ப்பது ஏன்? -முழுப் பூசணிக்காயை சோற்றில் அமுக்குவது போல!

நன்றியா? விசுவாசமா? வாங்கியகூலிடைச் சரிக்கட்டும் அளவுக்கு இன்னும் மாரடிக்க வேண்டி இருக்கிறதா? அல்லது இந்திராமீண்டும்தலைமை அமைச்சர் ஆகிவிட்டால் மஞ்சள் பத்திரிகைகளைத் தோற்கடிக்கும் விதத்தில் தனிப்பட்ட நபர்களைத்தாக்கி எழுதிக் காசு சம்பாதிக்கலாம் என்ற நப்பாசையா? பிளாக் மெயில்' செய்து பத்திரிகையாளன் என்ற முகமூடியில் பகற் கொள்ளைக்காரனுகலாம் என்ற ஆர்வமா? பத்திரிகைத் தணிக்கைடாளர்களின் 'செல்லப் பிள்ளையாகி' மீண்டும் 'சித்துவிளையாட்டுக்கள் புரியலாம் என்ற பேராசையா?

எல்லாம் தெரிந்தவர் என்று வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்வதற்காக இடையே இடையே' மார்க்சீய லெனினிச... மார்க்சீய லெனினிச ... ...' என்று மந்திரம் 'ஓதும்' அந்தஎழுத்தாளப் பதர் ' ஜனதா ஆட்சியில் தொழிற்சங்கத் தலைவர்களைப் போலீஸ்மட்டும் தாக்குவதில்லை... அவர்களை குண்டர்களும் சுட்டுத் தள்ளுகிருர்கள்...'' என்றுகூறி நீலிக் கண்ணீர் வடிக்கிருர்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

★ திரளுவோம் திருச்சியில்! ★

1938 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தில் முதன் முதல் இந்தி மொழி கட்டாய பாடமாக அன்றைய முதலமைச்சர் இராஜாஜி அவர்களால் கொண்டு வரப்பட்டது. தமிழர்களுக்கு இந்தி ஆட்சி மொழியா? தமிழர்கள் இந்தி பயிலவேண்டுமா? கூடாது -முடியாது என்றனர் தமிழ் மக்கள்.

ஆட்சியாளர்கள் தங்கள் முடிவினை மாற்றிக்கொண்டார்களில்லை. மாருக இந்திதான் தேசிய மொழி, இந்தியை எல்லோரு ் பயில வேண்டும் என்று அதிகார மமதையுடனும் பிடிவாதத்துடனும் செயல்பட்டனர். தமிழர்கள் வாளாவிருக்கவில்லை.

இந்தி எதிர்த்திட வாரீர்—நம்
இன்பத் தமிழ்தனைக்காத்திட வாரீர்
இந்திக்குத் தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம் – நீங்கள்
எல்லோரும் வாருங்கள்
நாட்டினரே!

என்று—
தமிழினத்தலைவர்கள் அழைத்தனர். அழைப்பை ஏற்று, தந்தை பெரியார் தலைமையில், அறிஞர் அண்ணு தளபதியாக இருநது வழிநடத்திய மொழிப்போர்ப்படையில்,

இல்லுக்கோர் தமிழ்மறவன்
ஈட்டுக்கோர் நாட்டுப்பெண்
தொல்லைத நம் இந்தியினைக்
கொல்லோமோ முரசே!

— என்று தமிழ் மானமறவர்கள் அணிதிரண்டு

குண்டுக்கஞ்சோம் வடவர்கள்
கூட்டுக்கஞ்சோம் பலபல
குண்டர்க்காம் செய்தித்தாள்
கூற்றுக் கஞ்சோம்
அண்டிற்று ந்நாட்டில்
அயலானின இந்திமொழி!
மண்டைப்புழு மாய்ந்ததென்று
அதிரயோ முரசே!

—என்று போர் முரசறைந்து

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை —
நமை
மாட்டநினைக்குஞ் சிறைச்சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த்
தாய்தனையே — உயிர்
இவ்வுடலைவிட்டு நீங்குப்வரை!

— என்று ஆர்த்தெழுந்தனர், தமிழ் காக்கும் பெரும்படையினர். பெரும்பாலோர்சிறை வைக்கப்பட்டனர். காராக்கிரகத்தில் தாளமுத்து -நடராசன் என்னும் இரு கண்மணிகள் மாண்டனர். தந்தை பெரியார் கொளுத்தும் வெயலின் வெப்பம் மிகுதியுமிருக்கும் பெல்லாரி சிறையிலும், அறிஞர் அண்ணு சென்னைச் சிறையிலும் வைக்கப்பட்டனர். இறுதி வெற்றி தமிழர்களுக்கே.

அடுத்தடுத்து — விட்டுவிட்டு இந்தி தமிழ்நாட்டின் மீது படை எடுக்கவும், தமிழ் மறவர் தடந்தோள் வலிமையால் விரட்டவுமான நிலை இருந்து வந்திருக்கிறது. இன்றும் இந்தி எப்படி எப்படியோ மறைமுகமாகத் தமிழ்நாட்டில் நுழைக்கப்படுகிறது. இந்தி திணிக்கப்படவில்லை என மாய்மாலமாக பேசியே திணித்துக் கொண்டிருக்கிருர்கள். தமிழகத்தின் இன்றைய ஆளும்வர்க்கத்தினர் தமிழர்களை எல்லா வகையாலும் வஞ்சிப்பதைப்போன்று மொழி வகையிலும் இந்திக்குத் திரைமறைவில் லாலி பாடி வருகின்றனர். நடிப்பில் எப்படி இரட்டை வேடம் தாங்கி நடித்தார்களோ அப்படியே மொழிவகையிலும் தங்கள் நடிப்புத் திறனைக் காட்டுகின்ருர்கள். எத்தனைநாட்களுக்கு இந்த இரட்டை வேடமோ! டிசம்பர் 23—24 நாட்களில் திருச்சியில் நடைபெறவிருக்கும் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இரட்டை வேடத்தினையும் தோலுரித்துக்காட்டத்தான் போகின்ருர்கள் நம் தமிழனத் தலைவர்கள்.

1938 –ல் துவங்கிய இந்தி எதிர்ப்பு, தமிழர் படையின் தொடர்ப்போரின் வீரவரலாறு இன்றைய தலைமுறையினர் எத்தனைபேருக்குத் தெரியும்? வரலாற்றினைத் தெரிந்து கொள்ள வேண்டியது நம் போன்ற போர் மறவர்களின் கடமைகளில் ஒன்றல்லவா?

1938 –39 -ம்ஆண்டுகளில்மூவேந்தர்களின் வில்—கயல்—புலி சின்னம் பொறித்த முத்தமிழ்க் கொடியேந்திதிருவாரூர்த் தெருக்களில் இந்தி ஒழிக—தமிழ் வாழ்க எனப் பண்பாடி வந்த அந்த வீர இளைஞர்தான் இன்றைய நமது இந்தி எதிர்ப்புப் பாசறைக்குத் தலைமை தாங்குகிருர். ஆம், டாக்டர் கலைஞர் தலைமையிலேதான் இந்தி எதிப்புப் போருக்குப் பாடிவீடு அமைகிறது திருச்சியிலே

'இந்திக்குத் தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம்
எல்லோரும் வாருங்கள்
நாட்டினரே'

—என்று அழைப்பு விடுத்து வாருங்கள், திரளுவோம் திருச்சி நோக்கி!

க. பெ. நெடுமாறன்

பனங்குலை

"உன் அப்பா — அம்மா இருக்கிறார்களா?"

"இல்லே. அம்மா இறந்து விட்டாங்க! அப்பா உயிரோட இருக்கிறரோ இல்லியோ எனக்குத் தெரியாது. என் தாயாரு வயத்திலே நான் இருக்கும்போதே அப்பா மேலே ஒருஅபாண்டமான கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு அவரு எங்கேயோ கண்காணாத சீமைக்கு ஓடிப் போயிட்டாராம். எனக்கு மூத்தது ஆண் பிள்ளையாம். அதுவும் ரெண்டு வயசிலே காணமப் போயிட்டதாம். குடும்ப சுகத்துக்கு மேல் விழுந்த இடியை நினைச்சு அழுது அழுது எங்கம்மாவும் கண் மூடிட்டாங்க! இப்ப நான் அனாதை!"

"அனாதையென்று சொல்லாதே! நேற்று வரையில் அப்படி! இன்று முதல்அந்த வார்த்தைக்கு இடமில்லே; கமலம்! ஏறத்தாழ என் வாழ்வும், உன் வாழ்வும் ஒரே மாதிரிதான்! நீயாவது தாயின் அரவணைப்பிலே வளர்ந்தாய். அன்னையின் முகத்தைக் கண்டு, அவர்கள் பொழியும் அன்பை உண்டு, செழித்து வளர்ந்திருக்கிறாய். தாயின் மடியில், தந்தையின் தோளில் கிடைக்கின்ற சுகம் எப்படிப்பட்டது என்பதையே நான் அறியமாட்டேன். அவர்கள் முகத்தைக் கண்டதாகக்கூட எனக்கு ஞாபகமில்லே. அனாதைவிடுதியொன்றின் கடமைக் கரங்கள்தாம் என்னை வளர்த்து ஆளாக்கி விட்டன. இன்று இரு அனாதைகளும் கூடினோம். அனாதை என்றஅடைமொழிக்கு வேலையில்லாமல் விரட்டிவிட்டோம்!"-என்றவாறு அவன் கமலத்தைத் தழுவிக் கொண்டான்.

அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்த இன்பம்—இருவருக்கும் அப்போது கிடைத்தது. கமலத்தின் தாயார் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி இட்லிக் கடை. அங்காடி வியாபாரம், இளநீர், பனை நுங்கு இப்படிப் பற்பல வியாபாரங்களைச் செய்து தன் மகளைக் காப்பாற்றி வந்தாள். அவள் இறந்துபோன பிறகு கமலம் தாயாரின் தொழில்களைமேற்கொள்ள நேரிட்டது. 'பனை நுங்கு' பருவமாதலால் கமலம் அந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள். பனங்காய் மொத்தமாக விலை பேசி வாங்கி அவைகளை விற்று வரும் சிறிய இலாபத்தைக் கொண்டு வயிறு கழுவிக் கொள்ள வேண்டிய நிலைமை,

அப்போதுதான் ஒரு நாள் அவளிடம் 'பனை நுங்கு' வாங்க வந்தான் வேலன். ஒரு நாள் வந்தவன் மறு நாளும் வந்தான். அடிக்கடி வந்தான். அவன் வந்து 'பனை நுங்கு' வாங்க'விட்டால் அவளுக்கும் அன்று வியாபாரம் நடந்ததாகவே தெரியாது. வியாபாரத்தில்பெரிய நஷ்டம் வந்தது போலவே முகத்தை வைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவாள். ஒரு நாள் அவன் அவளைக் கேட்டான்!

"இந்த வியாபாரத்தில் என்ன இலாபம் வரும்?" என்று.

அவள் விவரம் சொன்னாள். "நாளை முதலே பனங்குலைகள் கொண்டு வருகிறேன். வெட்டி வியாபாம் செய்; நிறைய இலாபம் கிடைக்கும்," என்றான்.

"அதெல்லாம்வேண்டாம்" என்று தலையசைத்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள் கமலம்.

மறுநாள், நாலைந்து பனங்குலைகளைத் தூக்கிக் கொண்டு வேலன் வந்தான், "ஏது இவைகள்?" என்று கமலம் கேட்டாள். "நானே பனை மரத்தில் ஏறி வெட்டிக்கொண்டுவந்தேன்" என்று பூரிப்போடு பதில்கூறி அவளது முகத்தையே நோக்கிக் கொண்டு நின்றான்.

'உங்களுக்குச் சொந்தமான மரமா?" என்றுஅவள் கேட்டாள்.

"புறம்போக்கிலே இருக்கிற மரம் யாருக்குச் சொந்தம்? எல்லோருக்கும் சொந்தந்தானே' என்று அவன் கூறி முடிப்பதற்கு; "அடேய்! திருட்டுப்பயலே! யாருடைய மரத்திலேடா திருடுகிறாய்?என்னை யாருன்னு நினைச்சே?" என்றவாறு ஒரு முரட்டு மனிதன் வேலனின் தலையில் பெரிய தடியொன்றால் தாக்கினான்.

வேலன் சுருண்டு வீழ்ந்தான். கமலம் வேலனைக் கவனிக்க ஓடினாள். முரடன் அங்கு கிடந்த பனங்குலைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு, "குட்டி ஆசைக்குப் பயல் பனங்காய் திருடுகிறானா? அதுவும் என்கிட்ட?" என்று கேலி செய்தவாறு அதை விட்டு நடந்தான். நடந்தவன் நின்றான்.

கமலத்தின் பரபரப்பைக் கவனித்தான். அங்குமிங்கும் ஓடி அவள் வேலனின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதையும், முந்தானையால் விசிறுவதையும் கண்டான். முரடன் முகத்தில் சபலக்குறி தலைகாட்டியது. கமலத்திடம் திரும்பி வந்தான்.

"இந்தா குட்டி! பனங்காய் வேணும்னா, என்னைக் கேட்டா தரமாட்டேன்? இந்த மாதிரிப் பயலுங்களை நம்பலாமா? இந்தா எல்லாத்தியும் வச்சுக்க! உனக்கு ஏன் இளவயசிலே இந்த வியாபாரம்! என்னைக்கேட்டிருந்தா நம்ப நாடகக் கம்பெனியில அயர்ன் ஸ்தீரீ பார்ட்டா ஆக்கியிருப்பேனே..." என்றவாறு முரடன் பல் இளித்தான்.

"சரிதான் போய்யா, வேலையைப் பார்த்துகிட்டு!" என்றவாறு வேலனைக் கவனிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டாள்சமலம். முரடன் தலையை அசைத்தவாறு ஏதோ முடிவுடன் அதை விட்டகன்றான். முருகானந்த மோகனகான சபாவின் உரிமையாளர் மோதக விநாயகம்பிள்ளை தான் அந்த முரட்டு மனிதன் என்பது கமலத்துக்குத் தெரியாமல் இல்லை. அவர் ஊர்ச்சொத்தைத் திருடி வாயில் போட்டுக் கொள்ளும் பெருச்சாளி என்பதும் அவளுக்குத் தெரியும். புறம்போக்குநிலத்தில் உள்ள பனைமரங்களுக்கு அவரே பாத்யதை கொண்டாடி வருகிறார் என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். விரைவில் கமலத்துக்கும் தானே பாத்யதை கொண்டாடப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாது.

அடிப்பட்டு வீழ்ந்த வேலனுக்கு மயக்கம் தெளிந்ததும் அவனைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றாள் கமலம். தேவையான சிகிச்சைக்குப் பிறகு. அவன் அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் புறப்படும்போது கமலம் விடையளிக்க மறுத்து விட்டாள், அவனும் காரணம் புரிந்துகொண்டான். இருவரும் தங்கள் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். இருவருமே அனாதைகளாகச் சந்தித்தார்கள். இருவரையும் விட்டு அனாதைப் பட்டம் ஓடிவிட்டது. ஆரத் தழுவினர்; ஆனந்தம் கொண்டனர்; அன்றைய இரவு இன்ப கீதம் பாடி. மெல்ல மெல்ல நகர்ந்தது. அவர்கள் தடுத்தும் கேளாமல் சேவல் கூவிற்று. சேவல் கூவாவிட்டாலும் நான் உதித்தே தீருவேன் என்றது கதிர். வாழ்வே புதிய களிப்பு! உற்சாகம்! தனியொரு பெண்ணின்பெருமூச்சுக்களை எதிரொலித்துக் கொண்டிருந்த அந்தக் குடிசை, காதல் பாடல்களை எதிரொலித்து மகிழ்ந்தது.

ஒருநாளிரவு — பல நாட்களுக்குப் பிறகு; நடுநிசி. காதலர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர், கதவுதட்டப்பட்டது. கமலம் சென்று திறந்தாள். வாட்டசாட்டமாக வளர்ந்து, ஆனால் வயதேறிக் காணப்படும் வெண்தாடிக் கிழவன் ஒருவன் எதிரே நின்றான்.

"யார் நீங்கள்?" கமலம் கேட்டாள். அதற்குள் வேலனும் எழுந்து வந்தான்;

"என்னை யாரென்று கேட்கிறாய்? மகளே கமலம்! என்னைத் தெரியவில்லையா உனக்கு? தெரியாதுதான்; இந்தப்பிறவியைத் தெரியாதுதான் வயிறும் வாயுமாக உன் தாய் மீனாட்சியைத் தனியே விட்டுவிட்டு ஓடிய இந்தப் படுபாதகனை உனக்குத் தெரியாதுதான்! அம்மா மகளே! நான்தானம்மா உன் அப்பன் அய்யாச்சாமி!"

"ஆ! அப்பா. என் அப்பா!..." கமலம் கதறினாள். கிழவரைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

"இதுதான்உன் அண்ணன் வேலனா?— வேலா என் ஆசை மகனே! அருமந்தச் செல்வனே! உன்னை இரண்டு வயதிலேயே நானும் என் மீனாட்சியும் இழந்துவிட்டு வடித்த கண்ணீர் கொஞ்சமா? அப்பா தம்பி! இதுவரை எப்படியடா வாழ்ந்தாய்? உன் தங்கைகமலத்தை எப்போதடா பார்த்தாய்? தலைமறைவாகப் போலீசுக்குப் பயந்து திரிந்துகொண்டிருந்த நான் நேற்றுதான் வந்து, நீ வளர்ந்த அனாதை விடுதியிலே விசாரித்தேன்; அவர்கள் விவரம் எல்லாம் சொன்னார்கள். உன்னைப் பறிகொடுத்ததாக நினைத்துக் கொண்டிருந்தேன், பிறகு என் நண்பன் ஒருவன் சொன்னான். நீ அனாதை விடுதியில் வளர்வதாக! அங்குபோனேன் நீ உயிரோடு இருப்பதையும் வளமாக வளர்ந்திருப்பதை அறிந்து கொண்டேன். குழந்தைப் பருவத்தில் உன்னை யாரடா திருடியது? ஞாபகமிருக்கிறதா மகனே! திருடியவர்கள் என் விரோதிகளாம். அவர்கள் போலீசுக்குப் பயந்து உன்னை நடுப்பாதையிலே போட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். அதன் பிறகே அனாதை இல்லம் உன்னை எடுத்து வளர்த்ததாம்; ஆகா... என் மகன் எவ்வளவு பெரியவனாகிவிட்டான் —! தம்பி; நீ எப்படி உன் தங்கையைத் தேடிபிடித்து இங்கு வந்தாய்?"

கிழவர் பேசிக்கொண்டேயிருந்தார் பூரிப்புத் தாங்காமல்

வேலன், அய்யோ அப்பா!" என்று கத்தினான். அவ்வளவுதான்; எங்கேயோ ஓட ஆரம்பித்தான்; ஓடினான் ஓடினான்! — இருளில் ஓடி மறைந்தான்.

கமலம் பிரக்ஞையற்றுக் யற்றுக் கீழே விழுந்தாள்,

"கமலம் கமலம்!" என்று கிழவர் கூப்பிட்டார். அவளைத்தூக்கித் தன்மடியில் வைத்துக் கொண்டார். இறுக அணைத்துக் கொண்டார். அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டார். இதழ்களால் பற்றியிழுத்தார். ஏதோ ஒரு உணர்வு கிழவருக்கு. கமலத்தைக் கீழே படுக்க வைத்தார், கால்களைத் தொட்டுப் பார்த்தார். ஜில்லிட்டு விட்டது. கமலம், போய் விட்டாள். கிழவர் விரக்தியுடன் அழுதார், அவர் மனம் பேசிற்று.

"சே! நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று! அண்ணன் தங்கையென்று அபாண்டம் சுமத்தி இருவரையும் பிரித்து விட்டால் அவன் ஓடி விடுவான்— இவளைத் தட்டிக் கொண்டு போகலாம் எனத் திட்டமிட்டேன். வேஷம் பலித்தது. ஆனால்வெள்ளாட்டுக் குட்டி கிட்டவில்லையே!"

கிழவர் பெருமூச்சுடன் தாடி, மீசைகளைக் களைந்தார், முரட்டு மோதக விநாயகம் பிள்ளையாக அந்தக் குடிசையை விட்டு வெளியேறினார். அவர் உரிமை கொண்டாடும் புறம்போக்கு நிலத்தின் வழியே வீடு திரும்பினார். ஒரு மரத்திலிருந்து ஏதோ தொப்பென்று விழுந்தது - பனங்குலையை யாரோ வெட்டுகிறார்கள் என்று: "யாரடா திருட்டுப்பயல்?" என்று கர்ச்சித்தவாறு மரத்தடிக்குப் போனார். மரத்திலிருந்துவிழுந்தது — பனங்குலையல்ல!— வீழ்ந்தவன்வேலன். தீக்குச்சியைக் கிழித்து உற்றுப் பார்த்தார். தலை சிதறிவிட்டது குலை சிதறுவது போல. குடும்பத்தைச் சிதற அடித்த அந்தக் குணாளர் எந்தவிதச் சலனமும் உள்ளத்தில் மோதாமல் சாதாரணமாக வீட்டுக்குப்போய் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தார்.

இப்படியும் பல பிறவிகள் உண்டு உலகத்தில்!

★

கருணாநிதி



அ. தி. மு. க. ஆட்சி செல்லும் ஆபத்தான பாதை!

★

தமிழ்நாட்டு அரசாங்கமே! நண்பர் எம். ஜி. ஆர். தலைமையில் உள்ள ஆட்சியே! நீ செல்லுகின்ற பாதை ஆபத்தான பாதை, இதற்கு மேலும் எங்களுடைய பேச்சைக் கேட்காமல் தொடர்ந்து சென்று கொண்டிருந்தால் அந்த ஆபத்திலிருந்து நீங்கள் மீள முடியாது.

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதியாகி விடும்!"

என்று வள்ளுவரே எச்சரித்திருக்கிறார். எனவே நாங்கள் ஆபத்தை உணர்த்துகிறோம், இருக்கின்றஅபாயத்தை எடுத்துக் காட்டுகிறோம். நீங்கள் செல்லுகின்ற பாதையிலே இருந்து திரும்பி நல்வழியிலே நடப்பதற்குத் தொடங்குங்கள் என்று அந்த எச்சரிக்கையைஅவர்களுக்கு தரத்தான் இந்தக் கூட்டங்கள் தமிழ்நாட்டிலே பல பகுதிகளில் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றனவே அல்லாமல் வேறு அல்ல.

இவைகளையெல்லாம் செய்து முடிக்காவிட்டால் பார் பார் போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்வதற்காக இந்த எச்சரிக்கைக் கூட்டம் அல்ல.

இன்றைக்குச் சொல்லாத காரணத்தால் அப்படி என்றைக்கும் நாங்கள் சொல்லாமல் இருந்துவிடப் போவதும் இல்லை. எனவே இந்தக் கூட்டங்கள் நாட்டில் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகின்ற வன்முறை வெறியாட்டங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த மெத்தவும் பயன்படுகின்ற கூட்டங்களாகும்.

மன்னார்குடியைப் பொறுத்தவரையிலே எனக்குமுன் இங்கே பேசிய மன்னை அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் அம்பிகாபதி அவர்களும் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்— சட்டமன்றஉறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்களும் என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டன என்பதையெல்லால் விளக்கிச் சொன்னார்கள்.

இன்றைக்கு எதிர்க்கட்சிகளெல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் சக்தியை திரட்ட தமிழகத்தில் இன்று குமுறி கிளர்ந்து எழுகின்ற அராஜகப் போக்கைத்தடுத்துநிறுத்த பெரும் முயற்சியில்ஈடுபட்டிருக்கின்றன என்றால் ஏதோ சென்னையில் இருக்கிற ஒரு டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை, அல்லது டி. வி. எஸ். சிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு தகராறு, அல்லது பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளருக்கு ஏற்பட்டிருக்கின்ற இடையூறு, அல்லது சேலத்திலே, அங்கு அமைக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்ற சுரங்கத்தில், நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர் நானூறு பேர் தங்களுடைய உரிமைகளைக் கேட்ட காரணத்தால், நானூறு பேரையும் சிறைச்சாலையிலே போட்டு பூட்டிவிட்டி அவர்களுக்குப் பதிலாகமாற்றார்கள் நானூறு பேரை வேலைக்கு சேர்த்திருக்கிறார்களே அந்தக் கொடுமை, ஆகிய இவைகள் மாத்திரமல்ல நம் முன்னால் இருக்கின்ற பிரச்சினைகள்,

இவைகள் இங்கே கூடி இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இரண்டு நாளும் தமிழகத்தில் கூடிய இலட்சக்கணக்கான மக்களுக்கு அற்ப விஷயங்களாகத் தோன்றலாம்.

சைக்கிள் தொழிற்சாலைதானே ஆயிரத்து எண்ணூறு தொழிலாளர்களுடைய பிரச்சினைதானே—டி. வி. எஸ். தொழிற்சாலைதானே, ஆயிரம் தொழிலாளர்களுடைய பிரச்சினைதானே—அதுபோல சேலம் பிரச்சினைதானே, நானூறு பேருடைய பிரச்சினைதானே; பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்களுடைய விஷயந்தானே ஐநூறு தொழிலாளர்களுடையபிரச்சினைதானே என்று நீங்கள் கருதுவீர்களேயானால் அவைகள் மன்னார்குடிக்குப் பரவ, கும்பகோணத்திற்குச் செல்ல, திருச்சிக்கு வர, தஞ்சாவூருக்குப் போக கோயம்புத்தூருக்கு வர சேலத்தில், நீலகிரியில் அங்கிங்கெனாதபடி தமிழகத்தில் எங்கெங்கும் அந்த நிலை பரவ எவ்வளவு நாளாகும்?

-கலைஞர்

— மன்னார்குடி பொதுக்கூட்டத்தில்

துரோகத்தைத் திகைக்கவைத்த தீரன்!

தோப்பூர் திருவேங்கடம்
எம். ஏ.,

மனிதனை வாட்டி வதைப்பது ரோகம் ஆனால், அதனினுங் கொடுமையானது துரோகம். தமிழக மன்னர்களின், அரசியல் தலைவர்கள் பலரின் வீழ்ச்சிக்கே அடிப்படையாக இருந்ததே துரோகந்தான் இன்னுகூட தமிழ்வாழ. தமிழர்வாழ தன்னுடல் பொருள், ஆவி அனைத்தையும் துச்சமென மதித்துத் தொண்டாற்றுவோரின். தூய்மைத் தலைவனும் டாக்டர் கலைஞரைப் பழி தூற்றித் தமிழ் வளர்த்த அரசைக் கவிழ்க்கக் காரணமாயிருந்தது 'துரோகம்' என்பதை நாடும்—ஏடும் நன்கறியும்.

அந்தத் துரோக மனத்தார்க்கு இணையாக வரலாற்றில் எவருமே இல்லை எனலாம். என்றாலும் அவர்களுக்கொப்ப ஒரு துரோகி' இருந்தான் அவன் துரோகத்தால் ஆட்சியைப் பெற்றிருக்கலாம் எப்படிப் பெற்றிருந்தாலும், அவன் ரோம் நாட்டின் மன்னனாகை இருந்தான். அவன்தான் செக்ஸ்டஸ. செக்ஸ்டஸ் ஆட்சியில், தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன். ஏன் என்றால் சிறைவாசம்; 'இம்!' என்றால் மரணதண்டனை. அனைத்தும் தெரிந்தவனைப்போல் நடித்து ஆண்டான். அவனுக்கு எல்லார் மீதும் சந்தேகம். யாரையும் நம்பமாட்டான். அவன் கொடுங் கோலாட்சியில், குடிசையிழந்தோர் குமுறி அழுதோர் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை கூறமுடியாது. அப்பப்பா! ஆட்சியா அது! அவலம்! எங்கிலும் அவலம்! மன்னனுயிற்றே என்று மதிப்பளித்து வந்தார், மக்கள். மண்டை கனத்தவன் மக்களைக் கசக்கிப் பிழிந்தான்.

தான் சொல்வதே சட்டம் என்று என்றுகூறி, தன் அமைச்சர், தானைத்தலைவர் எவரையும் மதியாமல் ஆட்சி செய்தான். பொறுத்திருந்த மக்கள் கடல் பொறுமை இழந்து பொங்கி எழுந்தது. நாடே எதிர்த்து நற்கக் கண்டவன் நடுக்கங்கொண்டு, தலை தப்பினால் போதுமே அப்பா வென்று தலையில் காலடிபட ஓடி. டஸ்கன் நாட்டரசன் 'லார்ஸ் போர்சினாவைத் தஞ்சம், அடைந்தனர்.

இனம் இனத்தோடுதானே சேரும். ஓடிவந்த துரோகியை உபசரித்தான் போர்சினா! லார்ஸ போர்சினாவிற்கு ரோமை என்றுமே பிடிக்காது. துரோகியைத் துணையாக்கிக் கொண்டு ரோமை நாசமாக்கிட நம்பாசை கொண்டான்.

ரோமை நாசமாக்குவதா, முடியுமா? என்று போர்ச்சினா யோசித்தான்! செக்ஸ்டஸ் முடியாதென்று தீர்மானமே செய்துவிட்டான்! அவனுக்கல்லவா தெரியும்! ரோமின் ஆலோசகர் ரோம் நகரத்தைப் பற்றிய கவலையே இல்லாமல் இருக்கின்றார் என்றால், அதற்குக் காரணம் அந்நாட்டின் பெருவீரன் ஒரேஷியஸ் ஒரேஷியஸ் நினைத்தால் முடியாத காரியம் எதுவும் இல்லை. அவன் வலிமையால் மட்டும் ரோமைக் கைப்பற்றவில்லை. அவன் ரோமின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவது அறிவுக் கூர்மையுங்கூட, அவனின் புத்திக்கூர்மைக்கு இணையே இல்லை. அவனையும், அவன் நண்பர்களையும் கைது செய்துவிட்டால் ரோம் நோயாளி நாடாகிவிடும். நாசமாக்குவது எளிது இவ்விதம் செக்ஸ்டஸ்சும், லார்ஸ் போர்சினாவும் திட்டமிட்டுப் பெரும்படை திரட்டினார்கள்.

அந்நாளில் ரோம்நாட்டில் போர்சினாவிடம் உள்ளதைப் போன்றபெரும்படை இல்லை. ஆனால் அதைப் போன்ற, அதையும் மிஞ்சக்கூடிய ஒரேஷியஸ் இருந்தான். ரோம் ஆலோசகர் அவையில் இருந்த குழு போர்சினாவின் படையை முடிப்பதற்குரிய வழிகாண ஆய்ந்து கொண்டிருந்தனர். அதுபோழ்து அங்கு மூச்சிறைக்க ஓடிவந்த ஒரு தூதுவன் வந்து, டஸ்கன்படை நகரின் எல்லை ஓரத்திற்கு வந்துவிட்டார்கள் என்று துடி துடிக்கக் கூறினான். அதைக் கேட்ட குழு அதிர்ச்சியுற்றது. டஸகன் படை ரோமுக்குள் நுழைந்துவிட்டால், ரோமைக் காப்பாற்றுவது என்பதுகனவிலும் முடியாது.

ரோம் நாட்டிற்கு இயற்கையான அரணாக இருந்தது. டைபர் நதி, ரோம் நாட்டினர் அந்நதியை 'தந்தை டைபர்' என்று போற்றினார்கள். அந்த ஆற்றின் குறுக்கே மரப்பாலம் ஒன்று இருந்தது. அதன் மீதுஏறித்தான் எதிரிகள் அந்த ஆற்றைக் கடந்து ரோமிற்குள் நுழைய முடியும். அந்த 'மரப்பாலத்தை'க் தகர்த்துவிட்டால் ரோம் தப்பிவிடும்.

அப்பொழுதுகுழுவிலிருந்த ஒரேஷியஸ் இக்கருத்தைத் தான் ஆலோசகரிடம் கூறினான். தாய் நாட்டைக் காக்கத் தலையைத் தரவும் தயங்காத டாக்டர் கலைஞரைப் போன்ற தாய்நாட்டுப் பற்றுளனான ஒரேஷியஸ். ஆலோசகரை நோக்கி, எனக்கு நான் கேட்கும் இரு நண்பர்களைத் தாருங்கள். நாங்கள் மூவரும் பாலத்தில் அடுத்த முனைக்குச் சென்று. அங்குள்ளகுறுகலான பாதையின் முனையில் நின்று கொண்டு, பாய்ந்து வரும் படை பத்தாயிரம்பேர் என்றாலும் தடுத்து விடுவோம் என்று முழங்கினான். அதுபோழ்து நீங்கள் மிக எளிதாக அப்பாலத்தை நொறுக்கிவிடலாமென்று தைரியமூட்டினான். அவன் வீரதீரச் செயல்களை அறிந்த குழுவினர் என்றாலும் அவ்வளவு பெரிய படையைத் தடுத்திட மூவரால் முடியுமா என்றஞ்சினர் என்றாலும் அந்த வேளையில் வேறொன்றும் செய்யத் தெரியாமல் ஒரேஷியஸ் திட்டத்தை ஏற்றனர்.

ஒரேஷியஸ், தன்னுடன் லார்ஷியஸ, ஹெர்மினியஸ் என்ற ஆகிய இருவரை அழைத்துக்கொண்டு, பாலத்தின் மறு முனைக்குச் சென்றான். இம்மூவரைக் கண்டு. டஸ்கன்படை கெக்கலித்தது. கடல் போன்ற படையை எதிர்க்க மூவரா, என்ற அலட்சியத்துடன், தன் படையிலிருந்து மூவரை அனுப்பினான், போர்சினா. இம்மூவரையும், ஒரேஷியசும் அவன் நண்பர்களும் சின்னாபின்னப்படுத்தியதைக் கண்ட, டஸ்கன் படையின் முதுகெலும்பைப் போன்றவனும், மலையைப் போன்ற உருவத்தினனுமான அஸ்ப்பரஸ், அவனாலும்தூக்க முடியாத வாளைத் தூக்கிக் கொண்டு — நெருப்புமிழும் கண்களோடு வெறிபிடித்தோடி வந்தான். அதைக் கண்ணுற்ற ஒரேஷியஸ் தன் நண்பர்களை ஓடிச்சென்று பாலத்தை உடைத்தெறியுமாறு கூறி, தான் தப்பித்தால் வருவதாகக் கூறினான். ஒரேஷியஸ் நண்பர்கள் தலைவன் கட்டளையைத் தட்டமுடியாமல், ஒரேஷியஸை தனியே விட்டுவிட்டுச் சென்றனர்.

பாய்ந்து வந்த அப்ஸ்பரஸ் தன் பெருவாளைத் தூக்கி, ஒரேஷியஸைத் தாக்கினான். அஞ்சா நெஞ்சனான ஒரேஷியஸ், அவ்வாள் தலையைத் துண்டாக்கா வண்ணம்தடபித்தானெனினும் அவன் தொடையை அவ்வாள் சுவைத்து விட்டது. எனினும் அஞ்சாமல் அஸப்பரஸைத் தாக்கிப் பந்தாடினான். அஸ்ப்பரஸ் மலை சாய்ந்தாற்போல் சாய்ந்தான்; அதுபோழ்துபாலமும் வெட்டப்பட்டதால் 'படார்' என்று முறிந்து டைபரில் வீழ்ந்தது. அஸ்ப்பரஸ் மண்ணைக் கவ்வியதைக் கண்ட டஸ்கன் படையினர் கதி கலங்கினர். படையெடுப்பைத் தொடர்வதா என்று தயங்கினர். உடனே ஒரேஷியஸ், பாய்ந்தோடும் டைபரில் பாய்ந்து, தொடைவலியைக் கூடப் பொருட்படுத்தாமல், டைபரை எதிர்த்து நீந்திச் சென்று மறுகரையை அடைந்தான். ரோம்நகரம் டஸ்கன்ஸ் படையெடுப்பிலிருந்து தப்பியது. நாடுகாத்த நாயகனும் ஒரேஷியஸை ரோம் மட்டுமல்ல இன்று உலகமே போற்றுகிறது. துரோகத்தின் உருவமான செக்ஸ்டஸ் எண்ணம் தூளாயிற்று. துரோகம் என்றும் வென்றதில்லை என்பதற்கு ஒரேஷியஸ் வீரம் நல்ல எடுத்துக்காட்டு அன்றோ! அந்த ஒரேஷியஸைப் போல் இன்று துரோகத்தை முறியடித்து தமிழகத்தை காக்க வல்லவர் நம்கலைஞர் அன்றோ!

★

நித்தமும் பாடுபடு

(ஏ. தமிழொளி)

நெஞ்சு கொதிக்குதடா — தோழா
நேர்ந்ததைக் கேட்டுவிட்டால்
கொஞ்சமும் அச்சமின்றித் — தோழா
கொள்கை பரப்பியவன்
பிஞ்சுக் குழந்தையடா — தோழா
பேதை இளஞ்செழியன்
வஞ்சகர் கொன்றனரே — தோழா
வாழ்ந்த இளங்குருத்தை

நொந்து கிடக்கின்றார் — ஏழ்மை
நுகரும் தொழிலாளர்
வெந்து மாய்கின்றார் — பசியின்
வேதனை தாளாமல்
எந்த நாட்டிலுமே — இல்லை
இத்தகு கேவலங்கள்
சிந்தனை செய்திடுவாய் — தோழா
சீறி எழுந்திடுவாய்

அன்புடை நம்தலைவர் — தோழா
அறிக்கை விட்டுவிட்டார்
துன்பம் தொடர்ந்திடினும் — தோழா
தொடரும் போராட்டம்
தென்புபிறக்குதடா —தோழா
தோள்கள் விம்முதடா
இன்பம் பெற்றிடவே — தோழா
எழுச்சி கொண்டிடுவாய்

முத்தமிழ் நாட்டினிலே — தோழா
மூடரின் ஆட்சியினைக்
கொத்தோடு பிடுங்கிடவே — தோழா
கொள்கை மறக்காமல்
நித்தமும் பாடுபடு — தோழா
நேர்மை வழியினிலே
வித்தகர் நம் கலைஞர் — தோழா
வேதனை நீக்கிடுவார்

கள்ளுண்ட

[5-ம் பக்கத் தொடர்ச்சி[

தமிழ்நாட்டில் என்ன நிகழ்ந்தது— என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது அவருடைய காமாலைக் கண்களில் படவில்லையோ?

தமிழ்நாட்டு டி. வி. எஸ். டிஐ— சைக்கிள்-இன்ன பிற தொழிற்சாலைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் மீது ஆளுங் கட்சியின் போலீசாரும், குண்டர்களும் மிருகத்தனமான தாக்குதல்கள் தொடுப்பது 'மெத்தப் படித்த அவர் கவனத்தைக் கவரவில்லை போலும்...

உழைக்கும் பத்திரிகையாளர் என்றுசொல்லிக்கொண்டு ஊரை ஏமாற்றும் அவருக்குத் தெரிந்ததெல்லாம் — காட்டிக் கொடுக்கும் தொழில்தான்! குல்திப் நய்யார் அந்த ஏமாற்று எழுத்தாளரின் முகமூடியைக் கிழித்து சுயரூபத்தைக் காட்டியதை மக்கள் என்ன மறந்தாவிட்டார்கள்?

"தனி நபர் மீது வெறுப்பு, பயத்தைத் தூண்டி முற்றிலும் முரண்படும் கட்சிகள் அதிக நாள் ஒற்றுமைக் கண்காட்சியை நடத்திவிட முடியாது... கண்காட்சிகள் காலவரையின்றி நீடித்தால் அதை ரசிக்க ஆள் இருக்காது...' என்று ஊருக்கு உபதேசம் செய்யும் அந்த பி. ப. எழுத்தாளர் கடந்த காலத்தில்— நெருக்கடி நிலையின்போது— செய்தது என்ன?

கலைஞர் என்ற தனி நபரை இழித்தும் பழித்துமே 'கண்காட்சிகள்' நடத்திக் காசு சம்பாதிக்க வில்லையா?

இந்திராவை,'இந்தியாவை ஆட்கொள்ள வந்த மாதா' என்றும், சுதந்திரத்தின் பிரதிநிதி' என்றும் பிழைக்கும் பத்திரிகையாளர் 'உடுக்கடித்துப் பூசிப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை.

ஆனால் —

'இந்திராதான் இந்தியா... இந்தியாதான இந்திரா...'' என்று கூறிய பரூவா போன்ற அரசியல் கோமாளிகளால் இந்திரா வீழ்ச்சி அடைந்தார். அதேபோன்ற ஒரு கோமாளிதான் பிழைக்கும் பத்திரிகையாளரும்.

அவர் போன்ற கோமாளிகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது— இந்திராதான்!

ஏனென்றால் இந்திரா இன்னொரு முறை 'விழுந்தால்' மீண்டும் 'எழுந்திருக்க' முடியாது!

'சவால் விடு தூது!'

— தகடூர், சின்ன. கிருஷ்ணன் எம்.ஏ.

எண்ணங்கள் தூய்மை யானல்
எல்லாமே நன்மை யாகும்
வண்ணங்கள் மாறு தென்று.
வரும் — வழியில் மாற்ற முண்டோ?
மண்ணுக்குள் தூங்கப் போகும்
மனிதவுடல் மறைவ தூண்டு!
மாநிலத்தில் செய்த தொண்டு
மன்பதை தான் மறப்ப தூண்டோ?
— குமுகாயக் கும்பலுக்கு...
'பெற்றவரைப் போற்றுகின்ற பிள்ளைகாள் — என்றும்
கற்றவரை மதிக்கின்ற கிள்ளைகாள்!
தமிழ்த்தாயைக் காக்கின்ற தானைகாள்! — என்றும்
தன்மானம் காக்கின்ற மான்காள் — கவரிமான்காள்!
என்றும் பணியாக வாழ்கின்ற வயல்காள்!
என்றும் துணையாக இருக்கின்ற புனல்காள்!
பகைவரையும் போற்றுகின்ற பண்புகாள் —
என்றும்
சுவையாக இருக்கின்ற தெல் நல்காள்! —
இளந்தென் றல்காள்!
'அனுதினமும் அறிவைக் கொஞ்சம் பெருக்குவோம் —
சில
அரைகுடத்தின் ஆட்டங்களை நிறுத்துவோம்!
தமிழ்மொழியைத் தரணியெங்கும் பரப்புவோம்! — சில
தருக்கர்களின் தகைமைகளைப் பொசுக்குவோம்!'
வீதியெங்கும் பள்ளிகளைக் கட்டுவோம்! — சில
வீணர்களின் பேச்சுக்களை விரட்டுவோம்!
தேனீபோல வேகமாக ஓடுவோம் — என்றும்
கூனிபோல இருப்பவரைச் சாடுவோம்!'
பண்பு கொண்ட மனிதராக இருப்போம்! — சில
வம்பு கொண்ட வகைகளையே அழிப்போம்.
துணிவு கொண்டு பகைவரையே முறிப்போம்! —
என்றும்
பணிவு கொண்டு நல்லவரையே மதிப்போம்!'
'கழகம் கொண்டு காரியத்தை முடிப்போம் —
என்றும்
உலகம் உய்ய இராப்பகலா யுழைப்போம்!
பகுத்தறிவுப் பகலவனைப் பாடுவோம்! — என்றும்
பார்முழுக்க அவர் புகழைத் தீட்டுவோம்'
அண்ணன் வழி ஆட்சியினை நடத்துவோம்! — என்றும்
அவர் புகழைத் தரணியெங்கும் பரப்புவோம்!
நாடெல்லாம் நன்மைகளைச் செய்குவோம்! — என்றும்
நலிந்தோரை ஏற்றமுறச் செய்குவோம்!
'காந்திவழி காரியத்தை முடிப்போம்! — என்றும்
கர்மவீரர் வாழ்க்கையையே போற்றுவோம்!'
சில கூனர்களின் குறுமதியை ஒழிப்போம்! — சில
ஈனர்களின் இழிமதியை மிதிப்போம்!
'பதுக்கல் வழிப் பேர்களையே அழிப்போம்! — என்றும்
பாதைமாற்றி நடப்பவரை பழிப்போம்'
எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்க, — என்றும்
ஏகபோக வாழ்க்கையினை எரிப்போம்!'
இமயம் வரை கொடிகட்டிப் பறப்போம் — நாம்
இன்றுபோல என்றுமே இருப்போம்!

புதுவை அரசியல்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக இருந்தபோதிலும் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து உண்ணுநோன்பே இருக்க வேண்டிய அளவுக்கு அவர் தள்ளப்பட்டிருக்கிறார்.

அவர் அள்ளி வீசியுள்ள குற்றச்சாட்டுக்கள் எந்த அரசுக்கும் அவமானத்தை அளிக்கக் கூடியன.

ஒரு பெண் அதிகாரி தமது தன்மானத்தைக் காத்திட — தற்காப்பை வலுப்படுத்த — சில கோரிக்கைகளை எழுப்பும்போது அவற்றைக் காதும் காதும் வைத்தாற்போல நிறைவேற்றியிருந்தால் எந்த வம்பும் வந்திருக்காது!

அவரது குரலுக்குச் செவி சாய்க்காமலே புறக்கணிக்க முற்பட்டதால், அறைக்குள்ளேயே மறைந்துவிடக்கூடிய சில அருவருப்பான காட்சிகள் அம்பலத்துக்கே வந்து விட்டன.

குற்றச்சாட்டு எழுப்பப் பெற்ற உடனேயே அதற்குத் தீர்வு காண்பதில்தான் எந்த அரசுக்கும் பெருமை ஏற்பட முடியும்.

ஆனால் இராதாபாய் சிக்கலில் இராமசாமி — இராமச்சந்திரன் சாக்குப் பந்தய அரசு செவிட்டுக் காதையே வைத்திருந்தது.

அதன் விளைவு என்ன?

இராதாபாயின் கூற்றுகளில் உண்மை உண்டோ — பொய் உண்டோ — நமக்குத் தெரியாது. ஆயினும் அவரது உண்ணுநோன்பு நடவடிக்கைகள் புதுவையில் கோலோச்சிய அ. தி. மு. க. அரசுக்குத் துடைத்தெறியவே முடியாத அருவருப்பான கறைகளையே அப்பிவிட்டு விட்டன.

இன்று புதுவை ஆட்சி கலைக்கப்பட்டதில் மிகவும் மகிழ்ந்திருக்கக் கூடியவர் இராதாபாய் ஆகத்தான் இருக்க முடியும் என்பதிலும் மிகையில்லை!

கொதிப்பைக் கொடுத்த கூட்டாட்சி

நாளாவட்டத்தில் இராமசாமியும் இராமச்சந்திரனும் ஒருவரையொருவர் வீழ்த்துவதற்குக் கச்சை கட்டினர்.

ஆனால் முதலில் முகிழ்த்தது மறைமுகமான மோதல்! பிறகு விளைந்தது நேரடியான களப்போர்!

நான்கு திங்களுக்கு முன்பு ஆளும் கட்சியைச் சார்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது கட்சிப் போர்வையைக் கழற்றி எறிந்து விட்டு இராமசாமி அமைச்சரவைக்கு வத்தி வைக்க முற்பட்டனர்.

புதுவை ஆளுநர் மேதகு பி. டி. குல்கர்ணி அவர்கள் சட்டமன்றத்தினைக் கூட்டி முதல்வர் இராமசாமி நம்பிக்கை வாக்குப் பெற்றாக வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தார்.

அதன்படியே 26-9-1978 இல் புதுவை சட்டமன்றம் கூடியது. முதல்வர் இராமசாமி தமது அமைச்சரவையின் ஆயுளைத் தக்க வைத்துக் கொண்டார்.

அத்துடன் எல்லாச் சிக்கல்களுமே தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஆறிவந்த புண்ணைக் கீறிவிட்ட கதையாகவே அடுத்து வந்த நிகழ்ச்சிகள் அமைந்தன.

1978 அக்டோபர் முதல் வாரத்தில் இராமச் சந்திரன் அமைச்சர் பதவியைத் துறந்தார். தம்மோடு சில ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு இராமசாமிக்கு எதிராகப் போர்க் கொடியை உயர்த்தினர்

அவரை அமைதிப்படுத்தி அவரது ஆதரவைப் பெறுவது இராமசாமிக்கு அவமானமாகத் தோன்றியதுபோலும் சொந்தக் கட்சிக்காரர்கள் தம்மைத் தூரத் தள்ளி வைத்தாலும் பரவாயில்லை என்கிற அசட்டுத் துணிச்சல் அவரை ஆட்டிப் படைத்திருக்கிறது. தமது அமைச்சரவையை 9-10-78 அன்று விரிவாக்கிய அவர் தமது கட்சியைச் சார்ந்தவர்கள் மூன்று பேர்களை அமைச்சர்கள் ஆக்கியதோடு நில்லாமல் இந்திரா காங்கிரசைச் சேர்ந்த ஒருவரையும் அமைச்சராக இணைத்துக் கொண்டார்.

இந்தக் கூட்டாட்சி புதுவையில் உள்ள அ. தி. மு. க. வினருக்குத் தணியாத கொதிப்பைக் கொடுத்து விட்டது.

பதவியைத் துறந்து வெளியேறிய இராமச் சந்திரன் தமது கைவரிசை என்ன என்பதைக் காட்ட முனைந்தார், தமது கட்சிக் காரர்கள் மூவரையும் மாற்றுக் கட்சிக்காரர்கள் எட்டு பேரையும் அழைத்துக்கொண்டு புதுடில்லி சென்றார். பன்னிரண்டு பேர் கொண்ட அந்தக் குழு — இராமசாமி அமைச்சரவையைக் கவிழ்க்க வேண்டும் என்று தலைமை அமைச்சரிடமும் குடியரசுத் தலைவரிடமும் கோரிக்கை விடுத்தது.

இதற்கிடையில் இராமசாமி 25-11-78 இல் சட்டமன்றத்தைக்கூட்டி நம்பிக்கை வாக்குப் பெறுவதாக அறிவித்தார்.

ஆனால் மைய அரசின் அமைச்சரவை அவரது கூற்றை ஏற்கவில்லை. அதனுடைய பரிந்துரையை ஏற்றுக் குடியரசுத் தலைவர் மேதகு சஞ்சீவ ரெட்டியார் புதுவை மாநிலத்தின் அமைச்சரவையைக் கலைத்துவிட்டு 12.11.78 முதல் அந்த மாநிலத்தைத் தமது நேரடி ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்து விட்டார்.

ஜனநாயகத்துக்குச் சவக்குழியா?

நவம்பர் 24 இல் சட்டமன்றம் கூடி முதலமைச்சர் நம்பிக்கை வாக்கைப் பெறப் போகிறாரா இல்லையா என்பதற்கு இடம் தராமல் 12-11-78 அன்றே புதுவை மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப் படுத்தியது சனநாயக நெறிமுறைக்கு உகந்ததுதானா என்கிற கேள்வி எழுவது இயற்கை!

ஆனால் இராமசாமி சொந்தக் கட்சிக் காரர்களைக் கொண்டு மட்டுமே 9.10.78 இல் அமைச்சரவையைப் புதிதாக விரிவாக்கியிருந்தால் சனநாயக நெறிக்கு அவரால் சவக்குழி தோண்டப்பட மாட்டாது என்னும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும் அவரோ சொந்தக் கட்சிக்காரர்களைப் பகைத்துக் கொண்டதோடு இந்திரா காங்கிரஸ் கட்சிக் காரரை அமைச்சர் ஆக்கியி

(11-ம் பக்கம் பார்க்க)

தாய்சொல் கேளா தனயன்!

கேள்வி: நீங்கள் மீண்டும் இந்தியப் பிரதமரானால் உங்கள் மகன் சஞ்சய்காந்தி மீண்டும் அரசியலில் நுழையாமல் இருக்க உத்தரவாதம் அளிப்பீர்களா?

பதில்: அப்படி உத்தரவாதம் அளிக்க நான் யார்? அப்படிச் செய்வது ஜனநாயக விரோதமானது.

-இலண்டன் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார் இந்திரா காந்தி

'அப்படி உத்தரவாதம் அளிக்க நான் யார்? என்று கேட்பதன்மூலம் மகன்மீது தாய்க்குள்ள உரிமை தனக்குக் கிடையாது என்கிறாரா இந்திரா? அல்லது தான் சொன்னாலும் தன் மகன் கேட்கமாட்டான் என்கிறாரா?

ஒருவரை அரசியலில் ஈடுபடக்கூடாது என்று சொல்வது ஜனநாயக விரோதமானது என்பதை ஒத்துக்கொள்வோம்.

ஆனால் —

சஞ்சய்காந்தியின் கடந்தகால அரசியல் எத்தன்மையானது? எந்தப் பதவியிலும் இல்லாத அவர் அமைச்சர்களுக்கே கட்டளையிடும் 'பிரதமருக்கும் பிரதமராக' இருந்தார்: 'கட்டாய அறுவை' என்ற பெயரால் ஏராளமான ஆண், பெண்களை துன்புறுத்தத் தூண்டுகோலாக இருந்தார்; நகரை அழகுபடுத்துவதாகக் கூறி ஏராளமான குடியிருப்புகளை இடித்து ஏழை மக்களை 'பிளாட்பார'வாசிகளாக்கினர்.

தான் போகுமிடமெல்லாம் மாநிலமுதல்வர்கள் மண்டியிட்டு வரவேற்க வேண்டுமென விரும்பினர். அரசு எந்திரத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு வேண்டாதவர்களைப் பழிவாங்கும் வேட்டையில் இறங்கினர்.

— இதை மனதில் கொண்டுதான் 'சஞ்சய் காந்தி மீண்டும் அரசியலில் நுழையாமல் இருக்க உத்தரவாதம் அளிப்பீர்களா? என கேட்டிருக்கிறார்கள் இலண்டன் பத்திரிகையாளர்கள் இந்திராவும் தன்னால் இயலாது எனக் கைவிரித்து விட்டார்

அதாவது —

இந்திரா காந்தி — மக்களின் கெட்டகாலமாக - மீண்டும் பிரதமரானால், சஞ்சய்காந்தி மீண்டும் அரசியலில் நுழையத்தான் செய்வார்; அதிகாரிகளுக்குக் கட்டளையிடுவார்; மாநில முதல்வர்களை ஆட்டிப் படைப்பார்; இளைஞர் காங்கிரசார் என்ற முகமூடி அணிந்த போக்கிரிகளும், வன்முறையாளர்களும் அவர் தலைமையில் மீண்டும் 'அராஜகங்கள்' நடத்துவார்கள்!

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ள துயர் துடைப்பு நிதி

(அனுப்பியோர் பட்டியல்)

5-11-78 இதழ் தொடர்ச்சி ரூ. 82,141-25

திருச்சி சோதிவடம் எம். பி. செல்லப்பன், உப்பிட மங்கலம் என். கருப்பண்ணன், மண்மங்கலம் வி. நல்லம்மாள், ஆர். இலட்சுமி, டபிள்யூ. பழனியப்பன், கடம்பங்குறிச்சி எஸ். சுப்பிரமணியன். வாங்கல் வி. எஸ். அர்த்தநாரி, மண்மங்கலம் ஆர். இராமசாமி, பெ. கருப்பண்ணன், உறையூர் எஸ். நடேசன். பி. பழனியம்மாள், எஸ். பக்கிர், முகம்மது, எம். அரங்கசாமி, எஸ். இராமானுஜம். ஏ. அருள்பிரகாசம், எஸ். நடராசன், இலால்குடி பி. சந்திரசேகரன். எஸ். இளங்கோவன், ம. பெரியசாமி, ஆர். கே. ஆனந்தகிருட்டிணன், மணச்சநல்லூர் எஸ். ஜெமராமன், பரவாய் இரா. கோவிந்தன், ஆ கோவிந்தன். அ. இராமசாமி, மண்மங்கலம் சண்முகம், காஞ்சி ஏ வெங்கடேன், கே தேவராஜ், எம். கண்ணன், பி. இராசேந்திரன், என். முனுசாமி, எஸ் மாதவன், க. கோவிந்தசாமி, மு. செல்வராஜ். கஜல்நாயக்கன்பட்டி கே. என். இராசண்ணன் ஆகிய 33 பேர் ரூ. 5 வீதம் 165-00

வ. ஆ. நார்சாம்பட்டி நரசிம்மன், கணமந்தூர் எஸ். டேவிட், எம். பார்த்தசாரதி, திருப்பத்தூர்வீராசாமி, ஓமக்குப்பம் மு. நடராசன், மிட்டூர் எம். பி. முகம்மது ரபி, ரெட்டிவலசை கே. தாமோதரன், மிட்டூர் எஸ. தட்சிணாமூர்த்தி, ஜி. பாஸகரன், சின்னபாய் ரெட்டியார், கோவை சிறுமுகை முருகப்பன், மாரையான், சேலம்-6 அழ. வள்ளியப்பன், பட்ளூர் கே. பழனியம்மாள், பெங்களூர் 51 அப்துல் வாகிப்கான், சென்னை-3 என். சாபிர் அகமது. விழுப்புரம் என். கண்ணப்பன், கோவை நன்செய் இடையார் திருமதி மாரியம்மாள் பரமசிவம் ஆகிய 17 பேர் ரூ. 5 வீதம் 85-00

காஞ்சிபுரம் எம். கணேசன், எஸ. சுப்பிரமணி, மு. வெள்ளை, என். சேகர், ஆ பெருமாள், கே. பூபாலன், வி. முனுசாமி, க சாந்தியப்பன், வி. கோபாலன், ஏ. ஆறுமுகம், மு. பச்சையப்பன், ரேணிகுண்டா என். கே. கிருட்டிணன். சென்னை-81 ஏ. கிருட்டிணன், எஸ. கணேசன் முகமது சமீசா, திருவல்லிக்கேணி ஆர். ஆறுமுகம், இராயபுரம் ஏ. இராஜி, கொருக்குப்பேட்டை கனியன் பூங்குன்றன், கோடம்பாக்கம் மணிமாறன், இரா. இளங்கோவன், அகரம் பாலகிருட்டிணன், திருச்சி பாலக்கரை சி. அழகன், சென்னை கே. அண்ணாமலை, இராமதாஸ இரவிச்சந்திரன், ஜனார்த்தனன். கலைச்செல்வன், வி. பெருமாள், வை. விஜயகுமார், முகமது சலீம், சீனிவாசன், ஆர். துரைக்கண்ணன், ஜபார், பார்த்தாரதி, பி அன்பரசி, சாமி ஆகிய 36 பேர் ரூ 5 வீதம் 180-00

சென்னை த. பேட்டை ஜி. செல்வன் பால், பெரியார் நகர் ப. கணபதி, திருவொற்றியூர் முருகையன், சேலம் ஏற்காடு எம். சம்பத்குமார், திண்டுக்கல் ஜே பிரான்சிஸ செயற்குழு உறுப்பினர் தி. மு. க., குட்டத்துப்பட்டி சி. இரத்தினம், ஆ. திருமழவன், காட்டுராயன், தென்காசி சண்முகசுந்தரம் முகவை வை. கருப்பசாமி, சேலம் சண்முகசுந்தரம், பெரியபுதூர் எஸ. பழனிசாமி கந்தசாமி ஆகிய 14 பேர் ரூ. 5 வீதம் 70-00

வ. ஆ. சந்தவாசல் எஸ். வி. தட்சிணாமூர்த்தி, தந்தகோபால், தட்சிணாமூர்த்தி சம்பத்து, வெங்கடேசன் பி. எம். மணி, கருணாகரன்; சண்முகம். கிருட்டினகிரி, பெருமாள், ஞானசேகரன். பி: கோவிந்தசாமி, குடியேற்றம் எஸ். கருணாநிதி. காட்பாடி எஸ். பி. இராசகோபால் புவனேஸ்வரிபேட்டை எஸ். சோமசுந்தரம், ஒடுக்கத்தூர் வீரபத்திரன் கலவை கே: பலராமன், கெம்மங்குப்பம் தனசீலன், குடியேற்றம் ஏஸ். என். துரைசாமி. கலசப்பாக்கம் கே: சிவசுப்பிரமணியம்: சேலம் இளம் பிள்ளை ஆறுமுகம். கோவை எம். சக்திவேல் பி. இராசன், எஸ், தங்கவேலு, ஆ3, எஸ. ஆட்டோ கேரேஜ, எஸ. வாசு. வி. தாமரைச்செல்வன், பி. எம்: அம்சா, எஸ. அசன் மூகமது ஆர். இராமசாமி, சுப்பிரமணியன். பி. என். பெரியசாமி, திருச்சி உப்பிடமங்கலம், எஸ. மருதநாயகம், சாந்தவாசல் வி. எஸ சம்பந்தம் என். மனோகரன், எஸ். பாண்டியன், என். குமார், போரூர் ஆர்: செயா ஏ. தாஸ, கே. ஜி: வேடியப்பன், ரெட்டில்ஸ சாபப்பன். சென்னை 39, ஆர். கோவிந்தசாமி, இராசாமணி கோவிந்தசாமி. செங்குன்றம் எஸ. இராமச்சந்திரன், மாதவரம் ஜி. இராசு, திருமங்கலம் சந்தியா பூபாலன், சென்னை-21 ரகுராமையா, பூபாலன் வியாசர்பாடி மல்லிகா ஒழுமலை, இரா. கிருட்டிணமூர்த்தி, ஆகிய 50 பேர் ரூ. 5-வீதம். 250 00

தஞ்சை தமிழ்க்குழல் தாமரை, சித்தமல்லி வி. சிவகாமி மேலப்பழவூர் கு: பரமசிவம், ஆ. செல்லப்பன், சி. சின்னப்பன்; அ. பிச்சை, உள்ளிக்கோட்டை வே, தங்கவேல், சிவ பாஸ்கரன், கே. இராசாராமன், டி. ஆர். சம்பந்தன், ரெ. இராமமூர்த்தி, சிதம்பரம் ஆர். மணி, நா. பழனிவேலு. திருச்சி எம். சாத்தையா தெ. ஆ. குணவரசல் கி, கண்ணப்பன், க. மணிமாறன், ம. கலியசாமி, கே வி, கிருட்டிணசாமி. குமரகிரி எம். நாகரத்தினம், கே. கோவிந்தராசு, கே. வைத்திலிங்கம், தஞ்சை இலவங்கார்குடி அர்ச்சுனன், கரூர் எஸ, பழனிசாமி. மூங்கில் துறை கே. கந்தசாமி, வேதாரண்யம், எஸ, பாலசுக்தரம், ஏ. கே. அஞ்சப் பிள்ளை, ஆவிடையார் பட்டிணம். எஸ். எம். சீனியார், தஞ்சை குலமாணிக்கம் வடபாதி கே, கோவிந்தராசு. தானிக்கோட்டகம் வை, சுப்பிரமணியம், ஆலம்பள்ளம், கே. வீராசாமி. ஆலத்தூர் இரா. இராமச்சந்திரன், இரா, வீரப்பன், த, காளிமுத்து, இரா. இலட்சுமணன். இரா. அருணாசலம், தமிழ்க்குடில் தமிழ்நிலவன், ஆகிய 36 பேர் ரூ. 5-வீதம் 180 00

சேலம் எஸ. புதூர், ஆரியூர், வி, மோகன் வகுரம்பட்டி ப. பூண்டியா கவுண்டர், வி. செல்லம்மாள் எழுமாத்தானூர் பி. கந்தசாமி. சண்டகுப்பம் ஆர். சண்முகம், ஈரோடு வாய்ப்பாடி சி. சுவாமிநாதன், எஸ. குமாரசாமி, என், திருமலைசாமி, கே. துரைசாமி, சென்னிமலை, டி, சதாசிவம். கொபிசெட்குப் பாளையம் ஜி, ஆர் லட்சுமணன். ஜி பி தியாகராசன், எ எ வையாபுரி, கே ஆர் இராமராஜு, ஆகிய 14 பேர் ரூ. 5 - வீதம் 70 00

திருச்சி ம நல்லூர் மு ராஜாங்கம். பரவாய் ஆர். கோபால், இரா. செகந்நாதன். பொ. மருதமுத்து நெய்வேலி பி, வெங்கடாசலம் ந மரியப்பிரகாசம் எம் பெரியசாமி. பி அழகப்பன், எஸ் தண்டபாணி எஸ இராமச்சந்திரன், ஜி பெருமாள், சீனிவாசன், சென்னை பி. பாலகிருட்டிணன், ஆர். மூருகேசன், கே கோவிந்தராசன், டி. சுப்பிரமணியன், எம். சக்கரபாணி. வி. சிவலிங்கம், வி. சுப்பிரமணி, எம், கண்ணன், எம். ச புருதீன், டி. முகம்மது இப்ருதீன், குடந்தை ஆர். வைத்திலிங்கம். பக்கீர் முகம்மது. நன்னிலம் மு. கலைநம்பி கும்பகோணம் விசுவநாதன், ஆர், சுப்பிரமணியன். நாகூர் தியாகராசன். முகவை கு. வே புரம், இராமலிங்கம்; வெள்ளக்கோட்டை பெருமாள், மேலப்பாளையம் முத்தையா முனிஸவரன். வத்திராயிருப்பு பன்னீர் செல்வம், தி. புத்தூர் எஸ. மீனாட்சிசுந்தரம் அ மணி, க மணி, ஆகிய 36 பேர் ரூ, 5 - வீதம் 180 00

முகவை தி. புத்தூர் எஸ, கருப்பையா, கு, சேது சி, சுப்பராமன், இராமப்பிள்ளை, இரா. குருசாமி. ஆர். கருப்பையா, பொ. பிச்சை, கா. மாரிமுத்து, சு, திருவரங்கம், மா தங்கமாரியம்தன் தி ஆ இராமசாமி, அ பழனிசாமி, பொ கந்தசாமி. தஞ்சை கீழ வீதி. கி. சோமு ஆகிய 14 பேர் ரூ, 5 - வீதம் 70 00

மதுரை மேல்கரைப்பட்டி கே. இராதாகிருஷ்ணன், சடையகவுண்டன்புதூர் கே. டி. பெருமாள்சாமி, வேடசந்தூர் சி. தனராஜ், சேலம் ஆர். இராமச்சந்திரன், திருவாக்கவுண்டனூர் வி. தங்கவேல், மதிஒளி, ஆர். கோவிந்தன், கோ. குப்புசாமி, சி. இராமன், ஏழுமலை, பி. இராமசாமி, பி. கோவிந்தன், ஜலகண்டபுரம் எம் சிவசுப்பிரமணியம், ஜே. ஏ. வெங்கடாசலம், பி. கே. நடராசன், அ திருநாவுக்கரசு, நங்கவல்லி, அ. இலட்சுமிநாராயணன், தாரமங்கலம் ஆர். மாரப்பன், ஜலகண்டபுரம் மரதையன், மோகனூர் ந. ரங்கசாமி, பி. பெரியசாமி வேம்படித்தாளம் எஸ. இராசேந்திரன், எஸ. சந்திரசேகரன், என். வரதராசன், எஸ. மனோகரன், பி எஸ சண்முகம், எஸ சுந்தரம்மாள் என் வி சுப்பிரமணி, முகவை முருகன், குளம் எம். ஜெயராமன், சென்னை-11 ஏ. கே விசுவநாதன், பி தேவராசு, டி சுந்தரம், பழனி அ. கலையம்புத்தூர் ம கிருட்டிணன், வி இராசு, சு குமாரவேல். எஸ சோமசுந்தரம், ஏற்காடு நாகலூர் பால்ராஜ் ஆகிய 36 பேர் ரூ. 5 வீதம் 180-00

ஏற்காடு நாகலூர் கே ஆர் மணிமாறன், கே அன்பழகன், எஸ, பாலு, மதுக்கரை அ ஜெயபாலன்; சேலம் 4 ப சுப்பிரமணி, கோவை-1 வி. இராசமாணிக்கம், கரூர் செல்லாண்டிபட்டி பன்னீர் செல்வம் கோவை பெருந்துறை பி. சி சுப்பிரமணியன், வி. ஆர். சுப்பிரமணியன், செ மு சாமி காரமடை கே ஏ இராமசாமி கே பி சாமி எஸ கணேசன்குமார் ஏற்காடு இராமசாமி நகர் ஏ அன்பழகன் ஆகிய 14 பேர் ரூ 5 வீதம் 70-00

ஆகமொத்தம் 89,641-25

தடம் புரண்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திய தொழிலாளர் சங்கம், நக்சலைட்டுகள் மற்றும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர்பெருங் கூட்டமாக கூடி நின்றனர்.

ஜனநாயகத்தைக் கொன்ற இந்திராவே திரும்பிப்போ
'நாஜி இந்திராவே திரும்பிக்போ'
'இந்திரா ஒழிக! — ஆத்திரம் கொண்ட கூட்டம் இப்படி ஒலி முழக்கம் செய்தது. அந்த ஒலி நான்கு திசைகளிலும் எதிரொலித்தன. கறுப்புக்கொடியும் காட்டத் தவறவில்லை.

டொமினியன்திரை அரங்கத்திற்குள் இந்திரா நுழைந்த போது அவர்மீதுமுட்டையை வீசினர். உடைந்த முட்டை அவருடைய இளஞ்சிவப்புப் புடைவையில் கறைப்படுத்தியது

இந்திய வரலாற்று ஏட்டிலே இந்திராகாக்தி ஏற்படுத்திய கறையை அது நினைவுப் படுத்தியது.

இந்திரா பேசினர். கூட்டத்தில் இருந்தவர்கள் பேச்விடவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களின் ஒழிக முழக்கம் பேச்சையே தடைசெய்தது,

நெருக்கடி நிலை காலத்தில் பேச்சுரிமையைப் பறித்த இந்திராவுக்குப் பாடம் புகட்டும் போக்கில் அந்தச் சம்பவம் அமைந்திருந்ததுவேண்டுகோள் விடுத்தார் இந்திரா! புறக்கணித்தனர் கூட்டத்தினர். அமளி ஏற்படுமோ என அஞ்சிய காவல்துறையினர் பின்புற வழியாக இந்திராவை அழைத்துச் சென்றனர்.

வரவேற்புக் கூட்டம் நடத்தியவர்கள் வாழ்த்து மடலை அளிக்கவில்லை — மாறாக கண்டன மடலை அவர் கையில் அளித்தனர்.

"என்னதான் நெருக்கடி நிலை அறிவிப்புக்கு நியாயம் கற்பிக்க முயன்றாலும் அது அநீதியே........, உங்களுடைய மகன் சஞ்சய் காந்தியும் அவரைச் சேர்ந்த கும்பலும் இந்திய நாடாளுமன்றத்தின் அரசியல் சட்ட அதிகாரங்களையும் உரிமைகளையும் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டனர்.'' இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்திராவிற்கு ஏற்பட்ட அவமதிப்பு அவருடைய இருண்டகால ஆட்சிக்குக் கிடைத்த பரிசு! செய்துவிட்ட தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க முயலுவது எதிர்கால அரசியல் வாழ்வுக்கு இருளை வரவழைத்துக் கொள்வதாகும்.

"இந்திரா — தன் தடம் புரண்ட போக்கிற்குத் தப்புத்தாளம் போடுகிறு"

கொக்கரிக்கும் கொசுக்கள்!

உழைத்துக் களைத்த கரங்களுக்குக்கொடுத்துச் சிவந்த கரம் இதோ பட்டா கொடுக்கப் போகிறது...

கண்ணீர்க் கறைபடிந்த விதவைகளின் கண்ணீரைத் துடைக்க இதோ பொன்மனச் செம்மலின் கரம் நீளு கிறது......

இதெல்லாம் ஏதோ ஒரு எடுபிடி தனதுதலைவரைக் காக்காய் பிடிக்கப் பேசிய பேச்சுக்கள் அல்ல...

இந்த நாட்டின் பெரிய படிப்பு, பதவி என்று நினைத்துக்கொள்ளப்படுகிறஐ.ஏ.எஸ்.படிப்பைப்படித்துவிட்டு விவஸ்தை கெட்டுப்போய் அரசாங்கமேடையில் அரசுச் செலவில் நடந்த ஒரு விழாவில் சென்னையில் ஓர் உயர் அதிகாரி பேசியதாக்கும்...

என் சினிமா அனுபவத்தை என் அரசியலோடு இணைக்க வேண்டாம் என்கிறார் தமிழக முதல்வர். சினிமா எப்படி அரசியலில் நுழைகிறது என்பதைப் பாருங்கள்...

நான் ஆணையிட்டால்...

உன்னை நான் சந்தித்தேன், நீ ஆயிரத்தில் ஒருவன் நான் தப்பிப் பொறந்தவண்டா...செத்துப் பொழைச்சவண்டா...இந்தச் சினிமாப் பாட்டுக்கள் அரசியல் மேடையில்போடப்படுகிறது...இதெல்லாம்ஒருஅரசியல் வாதியின் கடந்தகால தியாக வரலாறாகும். இந்த தியாக வரலாற்றை வைத்துக்கொண்டுதான் நாக்கு தடிப்பேறி நாலையும் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்...எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஏதோ நமக்கு எழுதத்தெரியாது...பேசத் தெரியாது என்றோ அல்லது நம் தரத்துக்கு அவர்கள் வரமாட்டார்கள் என்ற தைரியமோ சிலரை எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசத் தூண்டுகிறது. எழுதத் தூண்டுகிறது...

எருதுக்கு ஏறச் சொன்னால் கோபம்...நொண்டிக்கு இறங்கச் சொன்னால் கோபம் என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு...

அண்ணா என்ற நாளிதழ் பந்திற்கு இருதினங்கட்குமுன் எழுதுகிறது, அரசியல் விதவைகள்...ஒன்பது ரூபாய் நோட்டுக்கள்... இவர்களுக்குத்தக்க பாடம் கற்பிப்போம் என எழுதச் சொல்வது...அந்த எழுத்துக்கு மேலேநிறுவனர்...என்றுபெயரைப்போட்டுக்கொண்டு தூண்டிவிடுவது...பிறகு ரேடியோவிலும் எடுபிடி ஏடுகளிலும் எதிர்க்கட்சிகள் அராஜகத்தைத் தூண்டிவிடுகின்றன...என பிலாக்கணம் வைப்பது என்பது ஆளும் கட்சி தலைமையினை கோயபல்ஸ் பாணியாக மாற்றியிருக்கிறது...

தர்மபுரியில் ஒரு எம். எல். ஏ. ஒரு போராட்டத் தொண்டரை அடித்தே இருக்கிறார்...

தமிழகம் முழுவதும் ஆளுங் கட்சி எம் எல் ஏக்கள் கை நீண்ட பக்கமெல்லாம் அராஜகம் தலைவிரித்தாடுகிறது இன்றுவரை...

லண்டனில் இருந்து முதல்வர் செய்தி விடுக்கிறார்... ஆளும் கட்சித் தொண்டர்கள் தாக்கப்படுகிறார்கள்... எனத் தொடங்கி நான் திரும்பி வரும் வரை அமைதி காத்திடுங்கள் என்றிருக்கிறார்.

அப்படி என்றால் திரும்பி வந்தவுடன் "எதையோ" செய்யப் போகிறார் என்று அர்த்தமா? இல்லை அமெரிக்க பள்ளிக்கூடப் பாடத்தை படிக்கப்போகிறார்என்று அர்த்தமா?

"மூன்றே மாதத்தில் கிளர்ச்சிகளை ஒழித்துக் காட்டுவேன்" எனக் கொக்கரித்த முதல்வர் நம்மை கொசுக்கென்று நினைத்து மிரட்டியிருக்கிறார்...

கடந்த காலம் அவரை அப்படி பேசச் சொன்னது போலும்...

சிரிக்கும் சிலை படம் எடுத்து சிரிக்காமலே செத்த வெங்கடசாமி...

தாலி பாக்யம் படம் எடுக்க நினைத்து வாழ்வு பாக்யம் இழந்த கண்ணம்பா...

தபால்காரன் படம் எடுக்க நினைத்து பால்காரனுக்கு பணம் கொடுக்க முடியாமல் செத்த பிரண்ட் ராமசாமி...

மாடி வீட்டு ஏழை படம் எடுக்க நினைத்து மாடியிலே செத்த சந்திரபாபு

நவரத்தினம் படம் எடுத்து சவரத்தினமாக பெங்களூரில் செத்த ஏ பி நாகராஜன்...

இவர்களைப் பற்றி திரைக்குப் பின்னால் நடப்பவைகளைக் கவனிப்பவர்களுக்குத் தெரியும்

தனி ஒரு மனிதனின் அகங்காரத்தை எதிர்க்க முடியாமல் இறந்தவர்கள் இவர்கள்...

ஒரு வேளை அந்த 'வாடையை' அரசியலிலும் நடத்த நினைத்தால்

அதை எந்த முறையில் சந்திப்பது என்பது நமக்குத் தெரியும்.

எடுபிடிகள் அளந்து பேசட்டும்...நிறுத்தி எழுதட்டும்...இல்லை அப்படித்தான் என ஆரம்பித்தால் எழுதிப் பேசி பாருங்கள்...கொக்கரிக்கும் கொசுக்களை எப்படி தட்டுவது என்று எங்களுக்குத் தெரியும்.

—எஸ்

(நன்றி: 'ஜனசக்தி' 12—11—78)

புதுவை அரசியல் போதிக்கும் பாடம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பது மட்டும் கட்சி அரசியல் சனநாயகத்துக்குச் சரியானதாகுமா என்கிறஅடுத்த கேள்வியும் எழவே செய்யும்.

தாம் எப்படியும் முதல்வராக நீடிப்பதற்காக எந்தக் கட்சியோடும் இணையக் கூடியவர் - அதற்காக எத்தகைய சனநாயகமாபுகளையும்சாகடிக்கத் தயங்காதவர் — என்கிற பெயரை எடுத்து விட்டார் இராமசாமி.

அத்துடன் புதுவைச் சட்டமன்ற உறுப்பினர்களும் பதவிக்காக எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் தாவக்கூடியவர்கள் என்கிற அவப்பெயர் அழுத்தமாக ஏற்பட்டுவிட்டது.

எனவேதான் மைய அரசு புதுவை ஆட்சியைக் கலைக்க வேண்டிய கட்டாய நிலை உருவாயிற்று,

புதுவை போதிக்கும் பாடம்

புதுவை ஆட்சிக் கலைப்பு எல்லா அரசியல்கட்சிகளுக்கும் ஒரு சரியான எச்சரிக்கை ஆகும்.

பேரறிஞர் அண்ணா வலியுறுத்திய கடமை. கண்ணியம், கட்டுப்பாடு காத்திடாத எத்தகைய கட்சியும் தொடக்கத்தில் வெற்றிகளைப் பெற்றாலும் இறுதியில் தோல்விகளையே தழுவும் என்பதே அந்த எச்சரிக்கை!

அத்துடன் கட்சித் தாவல் களங்கத்தைச் சுமக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மறுபடியும் தேர்தலில் நிற்பதற்குத் தடை விதிக்கின்ற சட்டத்தை மீண்டும் மறு ஆய்வு செய்து அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மைய அரசு இனியும் தயக்கம் செய்யக் கூடாது.

கட்சித் தாவலைக் களைந்தெறியாத வரையில் சனநாயக நெறி அரசு சவலைப் பிள்ளையாகச் சோகைப் பிடித்துச் சாகவும் நேரும்.

மதியைக் கெடுக்கும் மது வெள்ளம் பாய்கின்ற புதுவையில்கவிழ்ந்த அரசு, நாட்டுக்கு போதிக்கும் நற்பாடம் இது தான்!

முதற்கட்ட மொழிப்போர் வரலாறு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த எழுச்சி மிக்க காட்சியை இன்று நினைத்துக் கொண்டாலும் உடல் சிலிர்க்கிறது!

அரசு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவரும், நீதிக்கட்சியின் முன்னணி வீரர்களில் ஒருவருமான சி. டி. நாயகம் அவர்களின் வீடு தியாகராய நகரில் உள்ளது அந்த வீடே இந்தி எதிர்ப்பாளர்களின் பாடி வீடாக அமைந்தது. அங்கிருந்துதான் அறப்போர் வீரர்கள் ஆச்சாரியார் வீட்டு முன் மறியல் செய்யப் புறப்படுவார்கள்.

சென்னையில் உள்ள இந்து தியலாஜிகல் உயர் நிலைப் பள்ளி முன் மறியல் அறப்போர் தொடங்கியது. நாள் தோறும் மறியல் தொடர்ந்து நடைபெற்றது.

மறியல் தொடங்குவதற்கு முதல் நாள் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய வீர வுரை இளைஞர்களை ஈர்த்தது. இளைஞர்கள் பலர் போட்டி போட்டுக்கொண்டு மறியலில் ஈடுபட வந்தனர்.

அண்ணாவுக்குச் சிறைத் தண்டனை

சென்னை மக்களை மறியல் செய்யத் தூண்டியதாக அண்ணாமீது குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. அண்ணா ஆறு மாத சிறைத் தண்டனையேற்றார்.

இந்தி எதிர்ப்பு அறப்போரை நடத்தும் தளபதிகள் பலர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு 'சர்வாதிகாரி' என்று பெயர்சூட்டப்பட்டது. முதல் சர்வாதிகாரி கைது செய்யப்பட்டால், அடுத்து சர்வாதிகாரியாக யார் பொறுப்பேற்க வேண்டும் என்றும் முன் கூட்டியே முடிவு செய்யப்பட்டிருந்தது.

அப்படி சர்வாதிகாரிகளாகப் பொறுப்பேற்றவர்களில் துறவிகளான சரூர் ஈழத்துச் சிவானந்த அடிகள் (இவரே பின்னர் காவியுடைகளைக் களைத்துவிட்டு அண்ணாவின் 'திராவிட நாடு' இதழின் நிர்வாகியாக விளங்கியவர்) சாமி அருணகிரி நாதர். சாமி சண்முகானந்த அடிகள் ஆகியோரும் சிறைத் தண்டனையேற்றனர். அன்றைய அமைச்சர்களில் ஒருவரான எஸ. இராமநாதன் அவர்களின் உடன் பிறந்த தம்பியான எஸ். சம்பந்தம் என்பவரும் ஒரு சர்வாதிகாரியாவார்.

என். வி. நடராசன் வந்தார்

1937 ஆம் ஆண்டு இறுதி வரை தீவிர காங்கிரசுக்காரராகவும், மறைந்த சத்திய மூர்த்தி அவர்களைத் தலைவராகக் கொண்டிருந்தவரும் சென்னை மாவட்ட காங்கிரசுக் கமிட்டியின் உறுப்பினரும், சென்னை பெத்து நாயக்கன் பேட்டை வட்டக் காங்கிரஸ் செயலாளருமான தோழர் என். வி. நடராசன் 1938 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சென்னை மாவட்ட காங்கிரசுக் கமிட்டியில் ஆச்சாரியாரின் கட்டாய இந்தியை எதிர்த்துத் தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால் எதிர்பார்த்தபடியே அத்தீர்மானம் காங்கிரசுக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டது. உடன் என். வி. என். தாம் வகித்து வந்த பதவிகளை யெல்லாம் உதறி எறிந்துவிட்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சேர்த்து தொண்டாற்ற வந்து விட்டார்.

என். வி. என். அவர்களைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், தாய் மொழிப் பற்றுக் கொண்ட தமிழர்கள் பலர் காங்கிரசை விட்டு வெளியேறி இந்தியை எதிர்க்கலானார்கள்,

தோழர் என் வி. என். தமது துணைவியாருடன் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை புகுந்தார். என், வி. என். அவர்களின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி நடராசன் கைக் குழந்தையுடன் (இக்குழந்தை தான் இன்று வழக்கறிஞராக உள்ள என். வி. என். சோமு) சிறைவாசம் ஏற்றார்.

இந்தித் திணிப்பை எதிர்க்கத் தாய்க்குலமும் திரண்டெழுந்தது. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள், ஒன்றிய கருத்துக் கொண்ட மகளிரை யெல்லாம் ஒன்று சேர்த்து 13—11—1938 அன்று சென்னை ஒற்றைவாடை அரங்கில் ஒரு மாநாட்டை நடத்தினார்கள்.

காலஞ் சென்ற தாழ்த்தப்பட்டோர் தலைவரும், முன்னாள் மேயருமான திரு என். சிவராஜ் அவர்களின் துணைவியாரான திரு மதி மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் வில்-கயல். புலி பொறித்த தமிழ்க் கொடியை ஏற்றுவிக்க, திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் (மறைமலையடிகளாரின் திருமகளார்) மாநாட்டுக்குத் தலைமை யேற்றார். திருவாட்டி வ. பா. தாமரைக் கண்ணியம்மையார் வரவேற்புரை யாற்றினர்.

தந்தை பெரியார் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய சொற்பொழிவின் காரணமாகத்தான். அன்றைய அரசு பெரியார்மீது வழக்குத்தொடுத்துச் சிறைத் தண்டனை வழங்கியது தந்தை பெரியார் அவர்கள் தள்ளாத வயதிலும் வெப்பம் மிகுந்த பெல்லாரிச் சிறையில் வைக்கப்பட்டார்

இந்த மாநாட்டில்தான் பெரியார் அவர்களுக்குப் 'பெரியார்' என்ற பட்டமும் தாய்மார்களால் அளிக்கப்பட்டது.



பிரதிநிதி
கே. எம். ஜி. மாதவன்
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை — 4.

புனித ராஜ்யம்....

(முதற் பக்கத் தொடர்ச்சி)

போலீஸ்; எங்க! உங்க வாயை ஊதுங்க!

நொண்டி: ஏன் சார் எங்க வாயை ஊதணும்? பேசினது அவுங்க. அதுக்குப் போயி எங்க வாயை ஊதிப்பாக்கணுமா?

போலீஸ்: ஏய்; நீங்க ரெண்டு பேரும் குடிச்சிட்டு இருக்கீங்க! உண்மையா இல்லையா?

நொண்டி: இல்லை!

போலீஸ்: பொய்! பச்சைப் பொய்.

நொண்டி: ஆமாம் சார்! பச்சை பொய்தான்!

போலீஸ்: அப்படி வாங்க வழிக்கு!

நொண்டி: பச்சைப் பொய்யின்னு உங்களுக்கு அர்த்தம் விளங்குதா? இதோ பாருங்க (கையைக் காட்டி) நாங்க குத்தியிருக்கிற பச்சை என்னு பச்சைன்னு பாருங்க! அண்ணுச்சி! நீங்களும் கையை நீட்டுங்க!

(அண்ணுச்சி — நொண்டி இருவரும் தங்கள் முன்கைகளைப் போலீசாரின் முகத்துக்கருகே நீட்டிக் கொண்டுநிற்கிறார்கள். அவற்றில் உள்ள பச்சைகளைக்கண்டுபோலீசாரின் கால்கள் தடதடவென ஆடுகின்றன அவர்களை யறியாமலே அவர்கள் கைகளில் உள்ள குண்டாந் தடிகள் கீழே விழுகின்றன)

போலீசார்: மன்னிச்சுக்கணும்! உங்களை யாருன்னு தெரியாமலே வாயை ஊதச் சொல்லிட்டோம்!

நொண்டி: உங்களைப் பழிக்குப் பழிவாங்காமல் விட முடியாது! இப்ப நீங்க ரெண்டு பேரும் உங்க வாய்களை ஊதிக் காட்ட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

போலீசார்: ஊதிரேங்க ஊதிரேங்க!

நொண்டி: ஊதுங்க!... [போலீசார் இருவரும் வாயை ஊதிக்காட்டுகிறார்கள்.]

நொண்டி: அது போகட்டும்!...ஏனய்யா... புனித ராஜ்யத்தின் தலைநகரம் சென்னை! அதாவது கேபிடல் சிட்டி' இங்கே விபச்சாரக் குற்றம் நடக்கிறது; நீங்க பாத்துக்கிட்டு இருக்கீங்களே!

போலீஸ் அப்படியா? எங்கே சார்?... எங்கே? சொல்லுங்க!

நொண்டி: உம்! நாங்க இந்தப் புனித ராஜ்யத்தின் பெருமை கெடக்கூடாதுன்னு கவலைப் பட்டு துப்பறியும் வேலை செஞ்சி ஒரு கேஸ் கண்டு பிடிச்சிருக்கோம் - என்ன செய்றது? உங்க வேலையை நாங்க செய்ய வேண்டியிருக்கு!

போலீஸ்: நீங்க வேற நாங்க வேறயா சார்? ரெண்டுபேரும் ஒண்ணு தானே!

அண்ணுச்சி: உம்! அதைப் புரிஞ்சுகிட்டா சரி! சட்டம் உங்க கையிலே மாத்திரம் இல்லை! எங்க கையிலும் அதிகாரபூர்வமா ஒப்படைக்கப்பட்டிருக்கு! அதுக்கு ஆதாரம் தேவைன்னு சமீபத்திலே நடந்த ''பந்த்''திலே அனுபவரீதியா உணர்ந்திருப்பீங்க!

போலீஸ்: அய்யா சொல்றதெல்லாம் சரி!,..முழுக்க முழுக்க சரி

நொண்டி: நமது புனித ராஜ்யத்துக்கு மாசு கற்பிக்கக்கூடிய – ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போல் இருக்கக் கூடிய— அந்த விபச்சார விடுதியை இப்போதே முற்றுகையிட வேண்டும் தயார் தானு!

போலீஸ்: தயார்! தயார்!

நொண்டி: அப்படியானுல் எங்களோடு வாருங்கள்!

(இருவரையும் பின்பற்றி போலீசார் தங்கள் தலைகளில் ''கர்மமே'' என்று அடித்துக்கொண்டு தொடர்ந்து போகிறார்கள்.)

14-வது காட்சி முடிகிறது

(தொடரும்)

வாங்கிவிட்டீர்களா?

★ பேரறிஞர் அண்ணு வழியில்
★ பெரும் பயணம் செல்வோர்
★ நேரான பார்வையுடன்
★ நிலைத்த புகழ் குவித்திட
★ கைவிளக்காய்ப் பயன்படும்
★ கதை இலக்கியப் பூஞ்சோலை!

அ. மறைமலையான் தீட்டிய

புதுமைப் படைப்பு' புரட்சிப் புதினம்!

அவளும் ஒரு எம்.எல்.ஏ

நெஞ்சை அள்ளும் நெடுங்கதை!
கொஞ்சு தமிழ்த்தேன் – நடை! தேனடை!
திருமணப் பரிசாக வழங்கத் தக்க
தித்திக்கும் கதைப் பெட்டகம்!

240 பக்கங்கள் — விலை ரூ. 7-50

கிடைக்குமிடம்:
ஆனந்தி பதிப்பகர்,
5, ஆருவது தெரு சாந்தி நகர்,
ஆதம்பாக்கம் - சென்னை – 600088.

நன்றி மறந்த சனிபகவான்!

தந்தை பெரியாரின் நூற்ருண்டு விழாவைத் தன்மானத் தமிழர்களெல்லாம் கொண்டாடிக் கொண்டிருககும் வேளையில், தாங்களும் பெரியார் வழிவந்தவர்கள்தாம் என்று காட்டிக் கொள்வதற்காகத் தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்களும் அரசு சார்பில் விழா எடுக்க முனைந்தார்கள்.

தமிழ்நாட்டு அரசு பெரியார் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில்தான், புதுவையில் இருந்த அ, தி. மு. க. அரசு திருநள்ளாறு சனீசுவரன் கோவிலில தங்கக் காக்கை வாகனத் திருப்பணித் தொடக்க விழாவை வாரியாரை வரவழைத்து நடத்தியது.

புதுவை அ. தி. மு. க. முதல்வர் இராமசாமி தங்கக் காக்கை வாகனத் திருப்பணியைத் துவக்கி வைத்ததோடு இருந்துவிடவில்லை; காக்கை வாகனத் திருப்பணிக்குத் தமது சார்பில் ரூ. 1000 வழங்குவதாகவும் அறிவித்தார். (வழங்குவதாக அறிவிக்கப் பட்ட நன்கொடை திருப்பணிக் குழுவுக்கு வந்து சேர்ந்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது) ஆனுல் அந்தச் சனிபகவான் இராமசாமியைக் காப்பாற்றவில்லை. சரியான நேரத்தில் கைகழுவி விட்டு விட்டார். தங்க வாகனம் செய்து வைக்க முனைந்தும்கூடத் தமது பதவியைத் தங்க வைத்துக் கொள்ளமுடியாது போயிற்று அவருக்கு!

தமது அமைச்சரவையை ஏழரை நாட்டுச் சனியோ, அஷ்டமத்துச் சனியோ பிடித்து ஆட்டி வைப்பதாக யாரோ அவரிடம் கூறியிருக்கிருர்கள். உடனே சனிபகவானுக்கே தங்க வாகனம் செய்து வைக்கும் திருப்பணிக்கு ஆவன செய்து, தாமும் ஆயிரம் ரூபாயை வழங்கி, சனிபகவானைக் குளிர்ச்சிப்படுத்த எண்ணியிருக்கிருர்.

பாவம்! வாகனத் திருப்பணி முடிவதற்குள்ளேயே காலைவாரி விட்டுவிட்டார் நன்றிகெட்ட சனீஸ்வரபகவான்! வாரியார்கள் ஆசீவாதத்தோடு வாகனத் திருப்பணி நடக்கட்டும்! வாழ்க பெரியார்–அண்ணு நாமம் என்ற பஜனையோடு தொடரட்டும் பெரியார் நூற்ருண்டு விழா!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (156சூரியநாராயணசெட்டிதெரு. இராயபுரம் 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணுசாலை, தேனும்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009